தனிப்பிரதி 1 அணா வருட சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. || காஞ்சிபுரம் 3—5—42 சித்திரபானு—சித்திரை 21ௗ ஞாயிறு || இதழ் 9


## நச்சுப் பொய்கை

பரதன்.

பசி! பசி! பட்டினி! பஞ்சம்!—என்று அரண்மனைக்கு வெளியிலே ஆயிர ஆயிர மக்கள் அலறித் துடித்தழுகின்றனர்.

சுவை! சுவை! பண்டமும் பானமும் மிகச் சுவை!—என்று களித்துக் கூறுகின்றனர் ஒருசிலர், அரண்மனைக்குள்ளே.

பசியால் வாடி, பஞ்சத்தால் பதைத்து எலும்புந் தோலுமாக உள்ளனர், அரண்மனைக்கு வெளியே இருந்து அழும் மக்கள்.

பொன்னே, பூங்கொடியே, மின்னலே, கன்னலே, என்றுள்ளனர் உள்ளே இருக்கும் உல்லாசிகள். வெளியே பெரும்பாலோர்—உள்ளே சிறுகூட்டம்!

பிரான்சு நாட்டிலே இக்காட்சி நடந்தது—மக்களின் புரட்சிப்புயல், மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் ஆங்கு குடியிருந்துகொண்டிருந்த மமதையாளர்களையும் கவிழ்க்காமுன்னம்.

"ஏன் இதுகள் இப்படிக் கத்துகின்றன" என்று பிரன்ச்சு அரசியார் கேட்டார். தோழியர் "ரொட்டி கிடைக்கவில்லையாம், அதற்காக அழுகிறார்கள்" என்றுரைத்தனர். அரசி கைகொட்டி நகைத்துவிட்டு, "இதற்காகவா இவ்வளவு ஆர்ப்பரிப்பு? ரொட்டிகிடைக்காவிட்டால், பிஸ்கட் சாப்பிடக் கூடாதோ" என்று கேட்டார்களாம். பஞ்சம், பசியறியாதபரிமளவல்லிக்கு ரொட்டிவாங்கித் தின்னவே காசின்றிக் கதறும் மக்களிடம் பிஸ்கட் வாங்கப் பணம் ஏது என்பது தெரியாது. வெளி உலகில் உள்ள வேதனையைத் தெரிந்து கொள்ளாமல், அரண்மனைக்குள்ளே வாழ்ந்த வனிதைக்கு, பலகோடி மக்கள் படும் கஷ்டம் தெரியாது.

இத்தகைய மனப்பான்மை, பிரான்சுப் புரட்சியினால் சிதறடிக்கப்பட்டது, ரஷிய புரட்சியினால் அழிந்தொழிந்தது என்று கருதிக்கொண்டிருந்தேன், இன்றும் இத்தகைய உலகமறியாத, உழைப்பாளரின் துயர் தெரியாத, தெரிந்தாலும் தெளிவு பிறக்காத, பேர்வழிகள் உண்டென்பதைச்சென்னை மெயில் விளக்குகிறது.

வெள்ளைக்காரர்கள், திராவிட இனத்தினிடம் அக்கரை கொண்டுழைத்தவர்களல்ல. கடந்த 150 ஆண்டுகளாக அவர்கள் ஆண்டுவந்தவிதம், மடிந்துகொண்டிருந்த ஆரியத்துக்கு மறுமலர்ச்சி தந்ததே ஒழிய, திராவிடமக்களை ஈடேற்றியதாக இல்லை என்பதை நான் கூறத் தேவையில்லை. அவர்கள் டம்புகழும் ராசதந்திர ஆங்கிலேயர் திராவிடரின் துயர்தீர மார்க்கமேது என்பதையோ திராவிட மக்கள் முன்னாளில் வாழ்ந்தவிதம் பற்றியோ சிந்தித்ததே கிடையாது. யார் தங்களின் அடிவருடிகளாக இருப்பர், யார் சரியான தாசர்களாக இருப்பார்கள், யாரிடம் நாலு இரண்டு வீசினால் நடுங்கி ஒடுங்கி நடப்பார்கள் என்றதனையே குறிக்கோளாகக்கொண்டு இதுவரை ஆட்சிசெய்துவருகின்றனரேயன்றி, இந்நாட்டுப் பழங்குடி மக்களிடம் பரிவு காட்டியதாகவோ, புதுநீதிவழங்கியதாகவோ எனக்குத் தெரியவில்லை. தெரிந்தவர் கூறட்டும் கேட்போம். நமது இனத்திலுள்ள சரித்திரம், தற்குறித் தன்மை, தன்மான மங்குதல், ஆகியவைகள், 150 ஆண்டுகளாகக் குறையக்காணோம். மூலைக்குச் சென்றிருந்த ஆரியம் முடிசூட்டிக்கொண்டு இன்று வெளிவரக்காண்கிறோம். வேதனை நமக்கு! வருத்தம் நம்மவருக்கு! ஆரியரும் ஆங்கிலேயரும், ஆலிங்கனம் செய்துகொண்டே வாழ்கின்றனர். இடையிடையே சிறு ஊடல்கள் நடக்கின்றன. ஆனால் உரசலுக்கும் உல்லாசத்திற்கும் முடிவு ஏற்படுவதில்லை. இனம் இனத்தோடு தானே!

மெயில் பத்திரிகை இதனை மெய்ப்பிக்கும் விதத்திலே, 29ந்தேதி ஓர் தலையங்கம் தீட்டியிருக்கிறது. அதிலே, நமது இயக்கத்தை வகுப்புவாத இயக்கமென்றும், நமது தலைவர், வகுப்புவாத விஷத்தைப் பெய்பவரென்றும் கண்டிக்கிறது. நமக்குப் புத்திகூறவும் முற்படுகிறது. அதற்காகச் சிலகாரணங்களையும் கட்டிக்கொண்டுவருகிறது. அதற்கு ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்க வேண்டாமா! பாவம்! நல்லமனிதருக்கு, திடீரென்று காக்காய்வலிப்பு வந்து, நடுரோட்டில் வீழ்ந்து விட்டால், நாலுபேர் நின்று ஏதாவது சிகிச்சை செய்யத்தானே வருவார்கள். மெயில் பத்திரிகை, மேதாவிகளால் நடத்தப்படுவதாகவும், மேதினியின் விஷயம் பூராவும் தெரிந்தவர்கள் தீட்டுவதாகவும் கூறப்படும் ஏடு. அதுமிகச் சாதாரணமான பேர்வழிகளின் பாணியில் செல்வதைக்கண்டால், உள்ளபடி எனக்கு, கோபத்தைவிட பரிதாபந்தான் பிறக்கிறது.

திராவிடர், ஆரியர் பிரச்சினை இருப்பது தெரியாதவர்கள் சிலர். அவர்கள் மேல்மாடியைவாடகைக்கு விட்டுவிட்ட மெத்தாதிகள்! காலந்தான் அவர்களுக்குக் கருத்தூட்டவேண்டும். வேறுசிலர், ஆரியர் திராவிடர் பிரச்னையை மிக அலட்சியமாகத் தள்ளி விடுபவர்கள். இந்த ரகத்துக்கு, மூளைஉண்டு, ஆனால், அதிலே வேண்டியஅளவு முதிர்ச்சி இருப்பதில்லை. இத்தகையவர்கள் இடிகிடைத்ததும், ,ஆமாம்' என்று கூறுவர். மற்றுஞ்சிலர், இந்தப்பிரச்னையை நாம்வேண்டுமென்றே கிளப்பிவிடுகிறோம் என்று பேசுவர். இந்தரகம், குதர்க்கத்தை நம்பி வாழுகிறது. மெயில் பத்திரிகை, இந்தரகங்களின் கூட்டுச்சரக்காகக்காணப்படுகிறது.

எதிரே இருக்கும் பள்ளத்தைக் காணமுடியாதவன் குருடன்! கண் இருந்தும் கருத்துக் குருடாகி, பள்ளமிருப்பதைக் கண்டும் அவ்வழி போய்க்கீழே உருள்பவன் போதையில் உள்ளவன். பலர்தடுத்தும், திமிரிக்கொண்டுபோய் அதிலே வீழ்பவன் பித்தன். அதுபோலவே ஆரிய திராவிடப்பிரச்னையைத்தெரிந்துகொள்ளாதவன் தெம்மாண்டை! தெரிந்து கொண்டும், அலட்சியப்படுத்துபவன் தெகிடுதத்தக்காரன். குற்றத்தைப் பிறர்மீது சுமத்தப் பார்ப்பவன் குறும்பன். மெயில் பத்திரிகையின் போக்கு, என்னை அகராதியைப் புரட்டிப்பார்க்கச் செய்தது. எந்த அடைமொழி கொடுத்து நான், அதன் இலட்சணத்தை உங்களுக்கு எடுத்துரைப்பது!

பெரும்பான்மையினரான நாம், சிறுபான்மையினரான பார்ப்பனரால் அவதிப்படுவதாகக் கூறுவது மெயிலுக்கு ஆச்சரியமாக இருக்கிறதாம்! இது பழங்கதையாம்!!

பிரான்சு நாட்டிலே பெரும் பாலானமக்கள் வாடிவதங்கியது சிறு கூட்டமான செருக்குப்பிடித்த சீமான்களால், என்பதை துரைமாரின் காகிதத் துப்பாக்கி மறந்துவிட்டது.

சிறு ரோம்பட்டாளம் பெரிய பிரிட்டனை அடக்கி ஆண்ட கதையை ஆங்கில ஏடு அறியும், ஆனால் நாம் அறியோம் என்று எண்ணுகிறது.

"அவர்கள் மிகச் சிறுகூட்டம்! நாமோ மிகப் பெருங்கூட்டம்" என்று ஆங்கிலக்கவி ஷெல்லி கூறிய அழகிய வாசகத்தை மெயில் மறந்துவிட்டது.

இவ்வளவையும் மறந்தபோதிலும், 40-கோடிபேர் வாழும் இந்தப்பெரிய, உபகண்டத்தை, மிகச்சிறு கூட்டமாகிய பிரிட்டிஷார் 150-ஆண்டுகளாக ஆண்டு வருவதை, மெயில் பத்திரிகை மறந்துவிட்டதென்று கூறமுடியாது.

இந்திய உபகண்டத்தில் சிறு ஆங்கிலேயக்கூட்டம் ஆதிக்கம் செலுத்துவதற்கு, துப்பாக்கி எனும் ஆயுதம் பயன்படுகிறது. பெரும்பான்மையினரான திராவிடரை, சிறு ஆரியக்கூட்டம் அடக்கி ஆளுவதற்கு, தர்ப்பை ஆயுதமாக உபயோகமாகிறது. இதனை அறியாத ஆங்கில ஏடு, ஏன் சிறுகூட்டத்திடம் பயப்படுகிறீர்கள் என்று அறிவுக்களஞ்சியம் போல் நம் எதிரே நின்று கேட்கிறது.

பெரிய பட்டணங்களைப் பிணக்காடாக்கும் பிளேக் வருவது எலிகள்மீது சவாரிசெய்யும் சிறு பூச்சிகளினால்! காலராகிருமி கண்ணுக்குத் தெரியாத அளவுள்ளது, ஆனால், ஆறடி ஆளையும் அக்கிருமிசாகடித்துவிடும்.

மாபெருங்கூட்டம்! பெரியார் கேட்பவர்மனதை ஆவேசமுறச்செய்யும் பேச்சுப் பேசுகிறார். ஆர்வம் ததும்புகிறது. ஆரியர் வெதும்புகின்றனர். வெண்தாடி காற்றிலே ஆடுகிறது! ஆரஞ்சுநிறச்சால்வை கீழே புரளுகிறது. கூட்டத்திலே நிமிடத்துக்கொரு கரகோஷம்!

வந்ததய்யா ஒரு கேள்வித்தாள்! 100-க்கு 97-பேராக இருக்கும் திராவிடர்கள் 3-பேராக உள்ள ஆரியர்களிடம் பயப்படுவது, வெட்கமில்லையா? இது கேள்வி. கேட்ட ஆள் தன்னை மிகமேதாவி என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பான். படித்தார் பெரியார், தலையை மேலே உயர்த்தினார், "இதென்ன ஆச்சரியமப்பா, பத்தாயிரம் பேர் கூடும் சந்தையிலே, முடிச்சவிழ்க்க 10-பேர்தான் வந்திருப்பார்கள். இந்த 10 பேருக்குப் பயந்துகொண்டுதான் 9990 பேரும் சர்வசாக்ரதையாக, தமது பணத்தை ஜேபியிலே வைத்துக்கொண்டு, அடிக்கடி தொட்டுப்பார்த்துக் கொண்டு, இருக்கிறார்கள். அதுபோலத்தான் இங்கு நாம் 97 பேராக இருந்தாலும், நமது இனத்தை நெடுநாட்களாகச் சுரண்டிக்கொண்டிருக்கும் 3 பேராக உள்ள கூட்டத்திடமிருந்து தப்பித்துக்கொள்ள, தக்க பாதுகாப்புமுறை தேவைஎன்கிறோம். இதிலே என்ன வெட்கம்!" என்று பதில் கூறினார். பொதுக்கூட்டம் பூராவும் களிப்புக்கடலில் நீந்திற்று. கேள்வி கேட்டவரின் முகம் மூன்றும் பேஸ்த்தாகிவிட்டது.

அத்தகைய கேள்விகேட்ட கூட்டத்தில் மெயிலையும் சேர்க்கவேண்டி வருகிறது. மெயில் பத்திரிகைக்கும் இதேசந்தேகம்! பெருவாரியாக உள்ள பார்ப்பனரல்லாதஇனம், சிறுகூட்டத்திடம் அஞ்சிப்பாதுகாப்புக் கேட்பது விசித்திரமல்லவா? என்று மெயில் கேட்கிறது! என்ன அறியாமை பாருங்கள்!

வானைத்தழுவும் அளவு உயர்ந்த வனப்பும் வலிவும் பொருந்திய கோட்டை கொத்தளங்களைத் தவிடு பொடியாக்கும், "பாம்" கட்டடத்தின் அளவுடன் ஒப்பிட்டால் எவ்வளவு சிறியது! கடற்கோட்டை போலுள்ள பெருங்கப்பல்களை உடைத்தெறியும் டார்ப்பிடோவை ஏவும் சப்மெரைன், கப்பலைவிட மிகச்சிறியது! பிரின்ஸ் ஆப்வேல்ஸ், பிரம்மாண்டமானது, அதனை வீழ்த்திய குண்டுகள், மிகச்சிறியன! இவைகள், நேற்று நடந்தன, நினைப்பு மாறுவதற்கில்லை. என்றாலும், மெயில் கேட்கிறது, பெரிய வகுப்பு, சிறிய வகுப்பிடம் அஞ்சுவானேன் என்று!

உலக சாம்ராச்யங்களிற் சிறந்த ஆங்கில அரசு, வியாபாரத்துறையில் விற்பன்னத்துடன் விளங்கும் ஆங்கில அரசு, விஞ்ஞானத்துறையில் விசேட இடம் பெற்றுள்ள ஆங்கில அரசு, திடீரென ஒருநாள், நீக்ரோக்களால் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலமக்கள், நீக்ரோக்களின் ஆட்சியில் வாழவேண்டியும், நீக்ரோக்கள், தம்மை உயர்ந்த இனமென்றும், ஆங்கில இனம் அடிமை இனமென்றும் கூறி, அதற்கேற்ற கட்டுத்திட்டம், சட்டம் ஏற்படுத்தி விடுகிறதென்று வைத்துக்கொள்வோம். அப்போது, பூர்வபெருமைகளை உணர்ந்த ஒரு ஆங்கிலேயனின் மனம் எவ்வளவு துடிக்கும்! எவ்வளவு பதைக்கும்! அத்துடனில்லாது, நீக்ரோக்கள், ஆண்டவனுக்கு நாங்களே பிரதிநிதி என்று கூறி, செயின்ட் பீடரின்கையில் இன்று இருப்பதாகப் பைபிள் கூறும் மோட்சலோகத் திறவுகோல் எம்மிடமிருக்கிறது என்றுரைத்து, மோட்சம் புக வேண்டுமானால், எமக்குக் காசுகொடுத்து, காலில் விழுந்து கும்பிட்டு, காலைக்கழுவி அந்த நீரை பயபக்தியுடன் பருகவேண்டுமென்றுஏற்பாடுசெய்தால், ஆங்கிலத் தோழர்களே, அரை நிமிடம் அதனை நீங்கள் தாங்குவீர்களா! ஒரு இனமக்கள், பலஜாதிகளாகப் பிரிந்து, சின்னபின்னப்பட்டு, ஒன்றை ஒன்று பகைத்துக்கொண்டு செத்தவாழ்வில் இருக்கச் சம்மதிப்பீர்களா! இந்தஏற்பாட்டை உண்டாக்கிய "கடவுள்கள்" என்று விக்ரகங்களைக் காட்டினால், அவைகளை உடைத்துத் தூளாக்க மாட்டீர்களா? இத்தகைய ஏற்பாட்டின் இருப்பிடமாகக் கோயில்கள் இருப்பின், அவைகளைக் குப்பைமேடாக்கமாட்டீர்களா! போப் ஆண்டவரின் போக்கை ஆதரிக்கமறுத்து, புரட்சி

(11ம் பக்கம் பார்க்க.)

# குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

# கொலைகாரியின் குறிப்புகள்!

சௌமியன்.

[முன்பு கள்ளக் காதலனைக்கொன்ற குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை பெற்ற காந்தா, தனது வரலாற்றைக் குறிப்பாக எழுதி வைத்திருந்ததில்; அவளது ஆரம்பக் காதல் விவரிக்கப் பட்டிருக்கிறது. அவள் காதலித்த சோமு, வுக்கு அவள் காதற்கடிதம் எழுதியும் அவன் இசையவில்லை. அக்கடிதம் இதோ கீழே)

‘என் உளத்தைக் கொள்ளை கொண்ட குணரூபா! என்னை மன்னிக்க வேண்டும். தங்கள் திருவடிகளைப் பணிந்து அடியாள் எழுதும் கடிதத்தை முழுவதும் படிக்கக்கோருகிறேன்.

பிராணேசா! தங்களைக்கண்ட நாள் முதல் எனக்குத் தங்கள் மீது அளவுகடந்த ஆசை உண்டாகி விட்டது. நாளாகவாக அந்த ஆசை எனக்குப் பித்தம் போல் வளர்ந்து விட்டது. இதனைத் தங்களுக்குத் தெரிவிக்கும் துணிவு எனக்குக் கொஞ்சத்தில் வரவில்லை. மகாரூபவானும், குணாளரும், செல்வவானுமாகிய தங்களைக் கணவராக அடையும் பேறுமகா கேவலமான நிலையில் உள்ள எனக்கு, தரித்திரத்தைக் கட்டிக்கொண்டு புரளும் எனக்குக் கிட்டாது என்று எண்ணினேன். தங்களுடைய அந்தஸ்திற்கு, எத்தனையோ இரதிகள், கிடைப்பர். பணக்காரப்பெண்ணொருத்தியை மணஞ் செய்து கொண்டு, பங்களாவில் உலவ, உங்களுக்கு ஆண்டவனின் கடாட்சம் இருக்கிறது. நான் உங்கள் மனைவியாக முடியுமா? திருடனுக்கு இராசவிழி வருமா? இதை எண்ணி நான் என் ஆசையை அடக்கிப்பார்த்தேன், முடியவில்லை. தங்கள் வீட்டுச்சமயற்காரியாகக்கூட ஆகமுடியாத அவ்வளவு அபாக்கியவதியாகத்தான் நான் இருக்கமுடியும். ஆனாலும் குழந்தைகள் சந்திரனைப் பிடித்துக் கொடு என்று தாயாரைக் கேட்பது போல், நான் தங்களை எனக்குத்தரும்படி, தினமும் தேவியை வேண்டுகிறேன். மனமே! பேராசை கொள்ளாதே என்று எவ்வளவோ கூறினேன் என்மனதுக்கு. மனது உம்மிடம் லயித்து விட்டது. தாங்கள் வெறும் பணக்காரராக மட்டும் இருந்தால் பரவாயில்லை. என்மனதைக்கொள்ளை கொண்டீர்கள். என்னைத் தங்கள் தர்மபத்தினியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தங்கள் திருப்பாத கமலங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். சாதாரண பணக்காரராகமட்டும் தாங்கள் இருந்தால் அவர்பணம் அவரோடு, நமக்கென்ன அதைப்பற்றி என்று எண்ணிக்கொண்டு, என்விதிப்படி காரியம் நடக்கட்டுமென்று நான் இருந்துவிட்டிருப்பேன். ஆனால் தங்களின் சுந்தரவதனத்தைப் பார்க்கப்பார்க்க என்ஆவல் கொழுந்து விட்டு எரிகிறது. தங்கள் புன்னகை என்க்கோர் புதுமையான உணர்ச்சியை ஊட்டுகிறது. தங்கள் பேச்சு எனக்கு சங்கீதமாக இருக்கிறது. இங்கு வீட்டிலே எவ்வளவோ தொல்லை, கஷ்டம் சொல்லிமுடியாது. அப்பாவின் அழுகுரல், தங்கையின் சோகம் இவைகள் எல்லாம் என்னைவாட்டிய போதிலும், தங்களை ஒரு முறை கண்டதும், என் துக்கமத்தனையும் பறந்துபோகின்றன. துரையே! என் தம்பியிடம் தாங்கள்பேசும் போது பணம் மிகக்கேவலமென்றும், செல்வம் நிலையாதது என்றும், கூறியிருக்கிறீர்கள். பணக்காரர்களிடம் இருக்கும் டாம்பிகம், ஆணவம் தங்களிடம் துளியும் இல்லாமல், தர்மசிந்தனையும், தயாள நோக்கமும் கொண்டு, என் கண்கண்ட தெய்வமாகக் காட்சி அளித்து வருகிறீர். அபலையாகிய நான், கூச்சத்தை விட்டு, தங்களிடம் பிச்சை கேட்கிறேன். தங்கள் அன்பை அளித்து என்னை இரட்சியுங்கள். எனக்கு வாழ்வு தானம் செய்யுங்கள். தமது குறையைக் கடவுளிடம் எடுத்துக் கூறி வேண்டுவது போல், நான் தங்களிடம் என் குறையைக் கூறிக் காடாட்சிக்கக் கோருகிறேன். ஒரு இளமங்கை இவ்விதம் எழுதுவது தகாது என்று எண்ணி என்னை உதாசீனம் செய்து விடாதீர்கள். கண்ணன் மீதுகாதல் கொண்ட உருக்மணி எழுதிய காதற் கடிதத்தைப்படித்துப் புளகாங்கிதமடையும் பக்தர் தாங்கள். என்காதல், உருக்மணி கொண்டிருந்த காதலுக்குக் குறைவானதல்ல. உருக்மணி பிராட்டி இராசர் மகள், நான் ஏழைக் குமஸ்தாவின்பெண், ஆசை அரண்மனைக்கு மட்டும் சொந்தமானதல்ல, இந்தக்குடிசையில் இருக்கும் குமாரிக்கு, இராசமாளிகையில் உருக்மணி கொண்ட ஆசைபோலவே இருக்கிறது. பித்துக்கொள்ளி, வாயாடி, வெட்கங்கெட்டவள், என்று, இக்கடிதத்தைக் கண்டுவிட்டு, என்னைக் கூற எண்ணாதீர். என் தம்பி தங்களிடம் என் விஷயமாகப் பேசி, தாங்கள் அலட்சியஞ் செய்ததாக, எனக்குக் கடிதம் எழுதினான். அதைக்கண்டதும் மனம் துடித்தது, அதன் துளிகள் இக்கடிதத்தில் உள்ளன. என் மீது கிருபை வைக்கக் கோருகிறேன். தங்களுக்குப் பணி விடை செய்து வாழ்வதைவிட எனக்குப் பாரினில் பரமானந்தம் வேறு இல்லை. எனது அன்பை உமக்கு அபிஷேகித்து உம்மை வணங்குகிறேன். ஒரு ஏழைப்பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வது கேவலம் என்று மற்றப்பணக்காரர்கள் கருதுவர். தாங்கள் அவ்விதமான குணமுடையவரல்ல. நான் தங்களின் பணத்தைக்கண்டதில்லை. பணத்தையே பெரும் பாலும் பார்த்ததில்லை. தங்களைக்கண்டேன். தங்கள் திருமுகத்தில் தாண்டவமாடும் தேஜசில் சொக்கினேன். சொர்ணரூபா! என்னைத்துடுக்குக் காரி என்று துப்பி விடாதீர். நான் பணக்காரக்குடும்பத்தினளாக இருந்தால், என்னைக்கலியாணம் செய்து கொள்ளும்படி அனேகர் தங்களிடம் சொல்லியிருப்பார்கள். நானோ ஏழை. எனக்குத் துணையார் வரமுடியும். இப்போது என்மனதைத் திறந்து கடிதம் எழுதுகிறேன். என் மனோபீஷ்டம் நிறைவேறுவதற்கு வேறு மார்க்கம் இல்லை. என்னைப் பற்றிச்சற்று ஈவு இரக்கங் காட்டுங்கள். என்கண்களில் ததும்பும் காதலை நோக்குங்கள். என் பெருமூச்சையும், இரவில் நான் புரளுவதையும், தலையணையைக் கண்ணீரால் நனைப்பதையும், நீர் கண்டதில்லை. நான் அபலை. எனக்கு உமது அருளைத்தர வேண்டுகிறேன். அன்பே! என்னைக்கைவிடாதீர். காந்தா.

இந்தக்கடிதத்தைக்கண்டு தான் அவர் சிரித்தாராம், திட்டினாராம். என்னைக் கண்டதால் உண்டான தோஷம் தீரவோ என்னவோ, அவர், தாயார் சகிதம், சிலநாட்களுக்கெல்லாம் தீர்த்தயாத்திரை செய்யக்கிளம்பி விட்டார். தீர்த்தயாத்திரையாம்; என்னைத்துடிக்க வைத்து விட்டு மண்டியிட்டுச் சென்ற என்னை மார்பில் உதைத்துக் கீழே தள்ளி விட்டு, பிச்சை கேட்கச்சென்ற இந்தப் பேதையைப் பிடரியைப் பிடித்துத்தள்ளி விட்டு, என் காதலைக் கேலி செய்து குப்பையில் சேர்த்து விட்டு, என்னைச் சாகடித்துவிட்டு அவர் தீர்த்தயாத்திரைக்குச் சென்று விட்டார். என் அன்பை அவர் நிராகரித்தது போல், அவரது அன்பை ஆண்டவன் நிராகரிக்காமலா போவார்!

(தொடரும்)

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்.

முன் தொடர்ச்சி.

நக்கீரன்

ஆரியர்களால் உண்டாக்கப்பட்ட சைவமதமானது பார்ப்பனரின் பிழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பொய்மதமென்று உணர்ந்த திருநாவுக்கரசர், அதனை வெறுத்துச், சமணமதத்தைத் தழுவி அம்மத நூல்களிலே பெரும் புலமை வாய்ந்து, **தருமசேனர்** என்ற சிறப்புப் பெயருடன் சமணர்களிற் றலைசிறந்து விளங்கினர். திருநாவுக்கரசரின் அறிவு நுட்பத்தையும், அவர் சைவமதத்தை வெறுத்துச் சமண மதத்தைத் தழுவியதையுங்கண்ட இந்துமதப் பார்ப்பனர்கள், தங்கள் பிழைப்புக்கு மண்போட ஒரு தமிழன் தோன்றிவிட்டானே; இவனை எப்படியாவது நம் வயப்படுத்த வேண்டும், இல்லையேல் இவனைத் தொலைத்துவிட வேண்டும் என்று கருதியவர்களாய்ப் பல சூழ்ச்சிகள் செய்து, மீண்டும் அவர் சைவமதத்தைத் தழுவும்படி செய்தார்கள். ஆயினும், நமது தமிழ் வீரனாகிய திருநாவுக்கரசர் ஆரியர்களின் கொடுமைக்கஞ்சிச் சைவமதத்தில் இருப்பதாகக் காட்டிக்கொண்டாரே யன்றி உண்மையான சைவப்பற்று அவருக்கு உண்டாகவில்லை. பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் ஏவப்பட்ட திருநாவுக்கரசரின் தமக்கையாராகிய திலகவதியாரை மகிழ்விக்கும்பொருட்டாகவே அவர் தம்மை ஒருசைவனாகக் காட்டிக் கொண்டார். திருநாவுக்கரசரின் தாய் தந்தையர் இறந்தபின், அவருடைய உறவினர் ஒருவரும் இன்மையால், அவரைத் திடீரென்று வெறுப்பது தகாதென்று கருதிய திருநாவுக்கரசர், தமது தமக்கையார் சொற்படி, தாம் ஒரு சைவனென்று பிறர் கருதும்படி தம்முடைய வெளிநடத்தையாற் காண்பித்தார். சூழ்ச்சியிற் கைதேர்ந்த பார்ப்பனர் திருநாவுக்கரசரின் உளப்பான்மையை எப்படியோ அறிந்து, அவருக்கு எந்தவகையிலாவது சைவத்தில் உண்மையான பற்றுதலும் நம்பிக்கையும்உண்டாக்குதல் வேண்டுமென்று கருதி, தங்கள் மரபிற் பிறந்த பார்ப்பனச் சிறுவனாகிய திருஞானசம்பந்தர் என்பார் சீர்காழியில் இருக்கிறார் என்றும், அவர் தமது மூன்றாம் ஆண்டிலேயே சிவபெருமானை நேரிற்கண்டு, அவர் மனைவியாராகிய உமையம்மையின் முலைப்பாலை உண்டு அருள் விளையாட்டுப் புரிந்துகொண்டிருக்கிறார் என்றும், அவரைப் பற்றி வானமளாவப் புகழ்ந்து கூறினார்கள். இதனைக் கேட்ட திருநாவுக்கரசருக்கு அச்சிறுவனைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற விருப்பமுண்டாகிச் சீர்காழிக்குச்சென்று அவரைக் கண்டார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்றபடி, பார்ப்பனச் சிறுவனாகிய அந்தத் திருஞானசம்பந்தர், தம்மையும் தம்மினத்தவரையும் தமிழ்மக்களினின்றும் வேறுபிரித்துக் காண்பிக்கும் முறையில், திருநாவுக்கரசரைக் கண்டவுடனே, **'அப்பரே உம்முடைய கடவுளைப் பாடும்'** என்று கூறினாராம். தமிழ்மக்களே, பாருங்கள் பார்ப்பனக் குறும்பை! மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா? என்பார்களே; அதுபோலச் சம்பந்தர்ஒரு சிறுவனாய் இருந்தபோதிலும், தான் ஒரு பார்ப்பனன் என்பதும், அதற்கேற்பத் தான் வழிபடும் கடவுளும் வேறென்பதையுங் காட்டவே, நாவுக்கரசரை நோக்கி, "உம்முடைய் கடவுளைப் பாடும்" என்று கேட்டார். அற்றேல் 'உம்முடையகடவுள் நம்முடைய கடவுள்' என்ற பிரிவினை எதற்காக அந்த இடத்தில் எழுந்த தென்பதனைத் தமிழ்மக்கள் ஊன்றிப்பார்த்தல் வேண்டும். சிவன் ஒரு பார்ப்பனக் கடவுள் என்பதற்கறிகுறியாகவே, இஞ்ஞான்றுங்கூடச் சிவன்கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு விழாக்காலங்களில் வடமொழிச் சொற்களாலேயே சிவவழிபாடு செய்தலும், வாழ்த்தொலிகள் கூறுதலும் நடைபெற்று வருகின்றன. தமிழ்மறை என்று சிலபோலித் தமிழரால் போற்றப்படும் தேவார-திருவாசகங்கட்குத் தினைத்துணையேனும் மதிப்போ செல்வாக்கோ அந்தச்சிவன் கோயிற்களிற் கிடையாது. பார்ப்பனர் வடமொழி மந்திரங்களால் வழிபாடுசெய்து திருநீறு பெற்று வெளியே சென்ற பின்னர்தான், எச்சற் சோற்றைக் காத்திருந்து உண்பார் போலத், தமிழ்மறையாகிய தேவாரம் ஓதப்படுகின்றது. இந்தஅழகோவிய அமைப்பில், தேவார-திருவாசகங்களெல்லாம் சிவனால் அடியெடுத்துக் கொடுத்துப் பாடப்பட்டனவாம் என்றும் சில தமிழ்மக்கள் வெட்கமின்றிக் கூறித்திரிகின்றனர். உண்மையாகவே, சிவன் ஒரு தமிழ் தமிழ்க் கடவுளாயும், தேவார-திருவாசகங்களெல்லாம் அந்தக் கடவுளாலேயே அடியெடுத்துக் கொடுக்கப் பட்டனவாயும் இருந்தால், தமக்கும் தம்மை வழிபடும் தமிழ்மக்களுக்கும் விளங்காத கடமொழி மந்திரங்கட்கு முதலிடம் அளிப்பாரா என்பதனைத் தமிழ்மக்கள் இனிமேலாவது எண்ணிப்பார்த்து இவ்விந்துச் சுழலின்றும் தப்பித்துத் தன்மானத்தோடுவாழ முயலவேண்டாமா?

இனித், திருநாவுக்கரசர் பல நாட்கள்வரை திருஞானசம்பந்தர் கூடவே இருந்து, அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவருடன்சென்று, இந்துமதமாகிய சைவமதத்தில் ஏதாவது உண்மை இருக்கிறதா வென்று அறிய முயன்றார். ஆனால், அவர் திருஞானசம்பந்தரின் பல்லக்கைச் சுமந்ததைத் தவிர வேறுபயன் ஒன்றும் அடையவில்லை. பார்ப்பனக் கும்பலிற் சேர்ந்து சென்ற தமிழனாகிய திருநாவுக்கரசர், அவர்கள் இட்டபணியன்றி வேறென்ன எதிர்பார்க்க முடியும்! அறிவினும் ஆண்டினும் முதிர்ந்த ஒரு தமிழன், மூன்றாண்டு நிரம்பப்பெறாத ஒரு பார்ப்பனச் சிறுவனுக்குப் பல்லக்குச் சுமந்தான் என்று எழுதியிருக்கும் புராணத்தைப் படிக்கும் எந்த உண்மைத் தமிழனுக்காவது குருதி கொதியாதிருக்குமா?

[தொடரும்]

## திருக்கழுக்குன்றம் மாநாடு.

மே 3ந்தேதி நடத்தப்படுவதாகக் குறித்திருந்த செங்கற்பட்டு ஜில்லா மாநாடு, ஏற்பாடுகள் பூர்த்தியாகாததால் 10ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மே 3ந்தேதி, தலைமை வகிக்க இசைந்து பேராசிரி S. சோமசுந்தர பாரதியார் சம்மதக்கடிதத்தைத் தோழர் அண்ணாதுரைக்கு அன்புகூர்ந்து அனுப்பினார். மாநாடு ஒத்திவைத்திருப்பதைத் தெரிவித்து, 10ந் தேதி மாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசையுமாறு தோழர் பாரதியாருக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது.

தோழர்கள் S. V. லிங்கம், C. N. அண்ணாதுரை இருவரும் திங்கட்கிழமை, திருக்கழுக்குன்றம் சென்று, மாநாட்டுக்கான ஏற்பாடுகள் விஷயமாக, ஆங்குள்ள தோழர்களிடம் கலந்தாலோசித்துவிட்டு வந்தனர்.

## சர்க்கார் காரியாலயங்கள் சிம்லாவுக்கு

போர் முடியுமட்டும், மத்திய சர்க்காரின் காரியாலயங்களைச் சிம்லாவிலேயே நடத்திவரலாம் என்று சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

# ஆச்சாரியார் சூழ்ச்சிக்குப் பெரியார் சவுக்கடி!

சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தோழர் ஆச்சாரியார் பாக்கிஸ்தான் திட்டத்தை ஆதரித்து வெளியிட்ட தீர்மானத்தைப் பற்றிப் பெரியார் அறிக்கை,—

23—4—42ல் சென்னைக் காங்கிரஸ் சார்பாக முடிவெய்திய தீர்மானத்தை நான் கவனித்துப் படித்ததில் முக்கியமாக இரண்டு வகையில் என்னை உற்சாகப்படுத்துகிறது. ஒன்று: எதிரியினுடைய படையெடுப்பு இருக்கும் இந்நிலையில் மக்கள் நடுநிலைமையாகவோ வேறுவிதமாகவோ எந்த முடிவுக்கும் வரமுடியாதென்பது. இரண்டாவது: காங்கிரஸ் ஒன்றுதான் இந்தியா முழுவதுக்கும் ஏகப்பிரதிநிதி என்றமுறையில் காரியங்களைச்செய்ய முன்வந்திருப்பதைக்கைவிட்டது. இந்தத் தீர்மானம் வரவேற்கக்கூடியதாய் இருந்த போதிலும், இது பதவியேற்பதற்காகச் செய்யப்படும் ஒருசூழ்ச்சி என்பதையும் சொல்லாமல் இருப்பதற்கில்லை. தோழர் C. இராசகோபாலாச்சாரியாரின் மிரட்டலினால் நிறைவேறிய தீர்மானத்தை எதிர்த்துத் தோழர் T. பிரகாசம் வெளியிட்ட அறிக்கை நான்கூறும் கருத்தை நன்கு வலியுறுத்தியிருக்கிறது.

முஸ்லீம் லீகின் பாகிஸ்தான் திட்டம் அரைமனதோடு, பதவிபெறுவதை உள்ளத்திற் கொண்டு, ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கருதமுடியுமே யன்றி, உண்மையான வகுப்புரிமை இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடல்ல வென்பதும் தெரியக் கிடக்கின்றது.

இம்மாகாணத்தில் முக்கிய பிரச்சினையாக வுள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்றவிஷயம் இத்தீர்மானத்தில் வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது. நூற்றுக்கு மூன்றுபேராகவுள்ள பார்ப்பன அரசியல் ஆதிக்கம் ஏற்பட்ட காலத்திலிருந்தே அதாவது மாண்டேக் சீர்திருத்த காலத்திலிருந்தே பார்ப்பனரல்லாதார் தலைவர்கள், பெரும்பான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் பதவிக்கு வந்ததும் இவையெல்லாம் புறக்கணிக்கப் பட்டதோடு, நூற்றுக்கு 3 பேராகவுள்ள பார்ப்பனருக்கே அதிகப்படியான பதவிகளும் அளிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி காங்கிரஸ் கொள்கைப்படி, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு பார்ப்பனருக்குத் தனிப்பட்ட முறையில் மந்திரி பதவி கொடுக்கப்பட்டதுமன்றி, அந்தப் பார்ப்பான அமைச்சர், பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தோழரான **இரத்தினவேலு தேவர்** திருச்சி முனிசிபல் சேர்மனாக வரவிடாது தடுக்க முயன்ற காரணத்தால் காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டும் இருந்தார். நூற்றுக்கு மூன்று பேராகவுள்ள பார்ப்பனருக்காகவே காங்கிரஸ் இருக்கிறதென்பதற்கு இந்த ஒரு உதாரணமே போதுமானது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சார்பாகத் தோழர் M. C. இராசாவால் கொண்டுவரப்பட்ட கோயில் நுழைவுத்திட்டமும் பார்ப்பன ஆதிக்கத்தின் காரணமாகத் தோற்கடிக்கப்பட்டது.

காங்கிரஸ் பதவியிலிருந்த 2½-வருஷகாலமும் தோழர் காந்தியாரின் பெயரைத்துணையாகக்கொண்டு பார்ப்பன சமூகத்தின்முன்னேற்றத்திற்காகவே வேலை செய்து வந்திருக்கிறதென்பதுமட்டுமன்றித் தென்னிந்தியாவில் பிராமண ஆதிக்கத்தை நிலைநாட்டுவதையே குறிக்கோளாகவும் கொண்டிருந்ததென்பது வெளிப்படை.

எனவே, காங்கிரசின் பேரால் ஏற்படுத்தப்படும் தேசிய சர்க்காரைப் பார்ப்பனரல்லாத நாம் ஒருபோதும் வரவேற்க முடியாது.

ஜஸ்டிஸ் கட்சியினரின் திட்டமாகிய **திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ளாது, எப்படி** ஒரு தேசிய சர்க்காரைக் காங்கிரஸ் ஏற்படுத்தமுடியுமென்பது எனக்கு விளங்கவில்லை. இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில், இந்து முஸ்லீம் பிணக்கென்பது கிடையாது. ஆனால், பார்ப்பனர்—அல்லாதார் என்ற வேற்றுமைதான் இங்குள்ளது.

ஜஸ்டிஸ்கட்சி பதவியில் இருந்த 20 வருஷ காலத்தில் வகுப்பொற்றுமைக்கான பல திட்டங்களை வகுத்துள்ளது.

எனவே, ஜஸ்டிஸ் கட்சியினுடைய உடன்பாடு பெறாத எந்த அரசியல் அமைப்பை உண்டாக்கினபோதிலும், அது பார்ப்பனரல்லாத பெரும்பான்மை மக்களின் உரிமைகளைப் புறக்கணித்து அவர்களின் முற்போக்கைக் தடுப்பதாகும் என்பதை அரசாங்கத்தாருக்கு இவ்வறிக்கை மூலம் தெரியப்படுத்துகிறேன்.

---

## ஆர். வரதராசக்கிராமணி எழுதுவது

எனது மனைவி கிருஷ்ணம்மாவுக்கு ஓராண்டாக அடிவயிற்றினுள் ஒரு பக்கத்தில் மூன்று அங்குல குறுக்களவுள்ள கட்டி ஏற்பட்டு நாளுக்கு நாள் பொறுக்கவியலாத வலியோடு வருந்தினர். அதற்குப்பல மருத்துவங்கள் செய்தும், பல கடவுள் வழிபாடுகள் செய்தும் பயன் ஒன்றுமில்லை. அதனைப்பார்த்த டாக்டர்கள் அது குடற் கிளைநோய் (அப்பண்டி சிட்டிஸ்) எனவும் அதனை அறுத்து எடுத்தாலன்றி நோய் தீராவெனவும் கூறினர்கள். நாங்கள் கொடிய அறுவை மருத்துவத்துக்கு அஞ்சிக் கடைசியாகச் சென்னைத் தியாகராயநகர் தமிழ் மருத்துவச்சாலைத் தலைவர் பண்டித எஸ். எஸ். ஆனந்தம்அவர்களிடம்காட்டினோம். அவர்அறுக்காமலே மருந்து கொடுத்தார். ஒரு மாதத்திற்குள் அக்கட்டி கரைந்து இருந்த விடம் தெரியாமல் மறைந்துவிட்டது. நோயும் அதன் தொடர்பாய் உண்டாகும் காய்ச்சலும் ஒழிந்தது. தமிழ் மருத்துவத்தின் உண்மையை உலகம் அறிய இதனை எடுத்துரைக்கின்றேன்

**ஆர். வரதராசக்கிராமணி**

3. பாலுமுதலியார் தெரு கந்தபிள்ளை சாவடி
கோடம் பாக்கம், சென்னை 3—8—1940.

---

தற்கால விலாசம்:— செயலாளர்

**பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,**

ஆலோசனை இடம்,
148, நடுத்தெரு சேக்குப்பேட்டை காஞ்சீபுரம்.

---

## கோவாபரேடிவ் பட்டுத்தறி நெசவுச் சங்கம்.

1942, எப்ரல் 27ந் தேதி காஞ்சீபுரம் பட்டுத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் என்றபேரால் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மேற்படி வைபவத்திற்கு, காஞ்சீபுரம் சென்ட்ரல்பாங் தலைவர் தோழர் S. முத்தைய முதலியார் B.A., B.L., C. I. E. அவர்களும், ஜில்லா ரிஜிஸ்டிரார் ஜனாப் மகமத் அப்துல் ஹாபீஸ் சாஹிப் M. A. அவர்களும் வந்திருந்தனர்.

மேற்படி சங்கத்திற்கு தோழர் A. K. தங்கவேலர் தலைவர், தோழர் N. V. M. வரதப்பச்செட்டியார் உப தலைவராகவும், தோழர் V. R. K. தங்கவேல் முதலியார் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் தோழர்கள் ராவ்பகதூர் K. சாம்பசிவ செட்டியார், பத்தல் சின்னசாமி செட்டியார், M. ரத்தின முதலியார் அல்வாரி துளசி செட்டியார் ஆகியோர் டைரக்டராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

தேவை.

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சிபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 3—5—42 [காஞ்சி.

# அவரது பிரேமை!

"நெஞ்சமிரண்டும் நிறைஅன்பாலே,
ஒன்றுகலந்தால் தடை ஏன்மாதே!"
—என்று காதலன் கேட்டான்.

"தர்மம் அன்றே!" என்று தழுதழுத்த குரலிற் கூறினாள் காதலி.

"காதலும் பொய்யோ!" என்று கேட்டான் காதலன். மிக முக்கியமான கேள்வி! அவன் எழிலிற் சொக்கிய அந்த சுந்தராங்கி, எப்படி, அந்தக் காதலைப் பொய் என்றுரைக்க முடியும். நெஞ்சறியப் பொய்யுரைக்க முடியுமா! எனக்கு விருப்பந்தான், ஆனால் நான் என்செய்வது. எனது தந்தை இருக்கிறாரே, அவர் தடை செய்யின் என் செய்வது என்ற கருத்துக்களை இரண்டே எழுத்துக்களில் கூறினாள் காதலி.

"தந்தை ஆதீனம்!" என்றாள்.

சகுந்தலையில் ஓர் காட்சி! கண்வர், சம்மதத்தைப் பெறக் காதலர்களுக்கு நேரமில்லை. காதல், காலங் கடப்பதுகண்டு கனல்போல் எரித்தது அவர்களை. அழகிய காடு, நிலவு! மலர் மணம்! வண்டினத்தின் ஒலி! மான்கூட்டத்தின் மந்தகாசம்! மயிலும் குயிலும் வேறு! இந்நிலையிலே, தந்தையின் சம்மதத்தைப்பெற நேரமேது? கூடிக்களித்தனர். தந்தைவந்தார் பிறகு. கோபித்தாரில்லை. குளிர்மொழியாற் கூறினார், "பொருத்தமானதே பொன்கொடியே! துஷ்யந்தன் உனக்கேற்றவன்" என்றார்.

இலட்சுமி அம்மையின் இள உள்ளத்தை ஈர்த்துத் தமதாக்கிக் கொண்டபோது தேவதாஸ்காந்தி, துஷ்யந்தன் சகுந்தலை 'டியூபட்' பாடினாரோ யாதோ நாமறியோம், ஆரியமங்கை வடநாட்டு வணிசகுல குமாரரைமணந்துகொள்ள, தோழர் இராசகோபாலாச்சாரியார் தமது சம்மதத்தை அளித்தார்! வைதீக உலகம் வெகுண்டது. ஆச்சாரியார் புன்னகைசெய்தார். "காதலைத் தடுக்க நானுகர்த்தன்! கர்த்தனானுலுந்தானென்ன அது முடியுமா"—என்று மனதில் எண்ணினார் போலும். வைதீகம்சீறினது, சீர்திருத்தம் சிரித்தது. ஆச்சாரியார் சீர்திருத்த வாதியாகிவிட்டார் என்று எண்ணிக்களித்தனர்பலர். ஆனால் வைதீக உலகை ஆச்சரியத்திலாழ்த்தியதுபோலவே சீர்திருத்த உலகையும் ஆச்சாரியார் பிறகு சிந்தனையிலாழ்த்திவிட்டார். கலப்பு மணத்தை ஆதரித்த ஆச்சாரியார், இதுவரை, உள்ளும்புறமும் வைதீகம் வெளித்தெரியும் விதத்துடனேயே இருந்துவருகிறார். சீர்திருத்த வாதியாகவில்லை. அதற்கான பிரசாரம் செய்தாரில்லை. பார்ப்பனத் தலைவராகவே இருக்கிறார். பிறகு வைதீகமும் சீர்திருத்தமும் இரண்டும் உணர்ந்தது, ஆச்சாரியார், தமதுதிருக்குமாரியின் திருமணத்துக்கு இசைந்தது, சீர்திருத்த நோக்குடனல்ல, இலாபகரமான கூட்டு என்பதற்காகவே இதற்கு இசைந்தார். மேலும் தடுக்கினும் சில நடந்தேதீரும் அதனைத்தடுத்தல் அறிவீனம் என்பதையும் உணர்ந்தார், என்பதறிந்தனர்.

அச்சமயத்திலே நாட்டிலே ஆச்சாரியார் கிளப்பிவிட்ட கிளர்ச்சிக்குச் சமமானது, பாகிஸ்தானை அவர் ஆதரிக்க முன்வந்ததும், அதனாலேற்பட்ட கிளர்ச்சிகளும் என்று நாம் கூறத்தேவையில்லை. அந்தச் சமயத்திலே வைதீகம் சீறியதுபோல், இன்று இந்துமகாசபையையும், காங்கிரஸ் வைதீகர்களும் சீறுகின்றனர், அன்று சீர்திருத்தவாதிகள் மகிழ்ந்ததுபோன்றே இன்று பாகிஸ்தான் திராவிடஸ்தான் ஆதரவாளர்களுக்குள் சிலர் மகிழ்கின்றனர். அன்றிருந்து இன்றுவரை எங்ஙனம் ஆச்சாரியார் சீர்திருத்தவாதியாகவில்லையோ, அதுபோலவே, பாகிஸ்தானை அவர் இப்போது ஆதரிக்கிறாராயினும், இஸ்லாமியரின் நலனுக்குழைப்பவராகவோ, திராவிடரின் தோழராகவோ அவராக முடியாது! அன்று எங்ஙனம் ஆச்சாரியார் இலட்சுமி, தேவதாஸ் காதல், தடிக்கமுடியாதது என்றுணர்ந்து, தமது சம்மதந்தந்தாரோ, அது போன்றே இன்று, பாகிஸ்தானைத் தடுக்க முடியாது என்றுணர்ந்தார், தாமும் அதற்கிசைவதாகக் கூறுகிறார். அன்று எங்ஙனம் ஆச்சாரியார் இலாப நஷ்டக் கணக்கிட்டாரோ, அது போன்றே இன்றும் இலாப நஷ்டக் கணக்கிட்டதில், பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதாகக் கூறுவது வாய்க்குக் கொஞ்சம் வேலை, ஆனால், அதன்பயனாகவே, பதவிதமக்கும் தமது அடியார்களுக்கும் கிடைக்கிறது என்பதைக் கண்டார், எனவே பாகிஸ்தான் ஆதரிப்புத் தீர்மானம் நிறைவேற்றினார். இன்று அவர் வைதீகத்தின் அருளாளராக இருத்தல் போலவே, நாளை அவர் லீகின் விரோதியாக, இஸ்லாமிய ஆட்சிக்கு எதிரியாக இருக்கத் தயங்கமாட்டார்! இதனை மறந்தோர், எதிர்காலத்தை மறப்போராவர்.

"மாதரிடம்ஆசை கூடாதென்றுமகான்கள் உரைத்துள்ளனர். மதிவாணரே! நீர் அந்தமங்கையைத் தேடிக்கொண்டு, மதிற்சுவற்றைத்தாண்டி, மலக் குழியில் வீழ்ந்ததாகக் கேள்விப்பட்டேன். மனவேதனையுற்றேன்! நீரும் இங்ஙனம் செய்யலாமா? நீரறியாத வேதாந்தமும் உண்டா?" என்று குருதேவர், ஞானநந்தர் நமது முதற்சீடர் மதிவாணரைக் கேட்டார். மதிவாணர், "ஞானநந்தரே! என்னை விண்ணுக்குக்கோபிக்காதீர். நீர் அடுத்த வீட்டு அகிலாண்டத்தை என்னையத்தினம் ஆசை நாயகியாகப் பெற்றீரோ, அன்றே அடியேனுக்குப் பரத்தைவிட இகத்திலே இச்சை இயல்பாகவே உண்டாகிவிட்டது. நான் தேடிச்சென்ற மங்கையோ, தெய்வபக்தி யுடையவள். நம்போன்ற அடியார்களின் அகமகிழ்வுக்காகவே தானவதரித்ததாக அங்கமெல்லாம் பூரித்துக் கூறுகிறாள். அவள்தரும் சுகம்..........என்று பதில் கூறலானார்.

"சிவ! சிவா!" என்று காதைப் பொத்திக்கொண்டார் குரு! சீடன் கெட்டுவிட்டது மட்டுமல்ல, தனது மர்மத்தையும் வெளிப்படுத்த துணிந்துவிட்டான் என்பதறிந்து ஏங்கினார், அவர்மனம் துக்கத்தைத் தாங்கமறுத்தது, குருவின்கூத்தியாரைவிட, முதற்சீடருக்குக் கிடைத்தவள் அழகுள்ளவள், நமக்குக்கிடைப்பவள் யாரோ, என்று மற்றச்சீடர்கள் யோசிக்கலாயினர். புண்ணியச்சீட்டுகளைப் பொன்கொடுத்துப் பெறுவோம், புகுவோம் பொன்னாடு என்று பித்தமும் பேதைமையுங் கொண்டிருந்தமடவளர்ப்பாளிகள், விஷயம் வெளிவந்ததும், நொந்த உள்ளத்தவராயினர்!

மகேசுவரனை மக்களிடம் வரவழைப்பதற்காக அமைக்கிறோம் என்று கூறித்துவக்கப்படும் எத்தனையோ மடங்களில், கடவுளை அறியுங் கல்விபோய், கன்னியரின் சுகமறியும் கலவித்துறையில் குருவும்

சீடரும், சேர்ந்தோ, ஒருவரையொருவர் ஏமாற்றியோ நடப்பதுண்டு. சீடரைக்கண்டிக்கும் குரு, குருவின் கோணற் சேட்டையை வெளிக்குக் கொண்டுவரும் சீடர், என்ற இத்தகைய எழிலுடைக்காட்சிகளை நடாத்திக்காட்டும்மடங்கள் போலாகிவிட்டதுகாங்கிரஸ். இங்கே, மங்கை, வடிவில் பதவிவருகிறது, ஒவ்வொருவராக அந்த ஒய்யாரியிடம் சொக்குகின்றனர். ஒருவர் போகையில், மற்றவர் குறை கூறுவர், ஆனால், காங்கிரஸ் மடவாசிகளுக்குள் இன்னார் தான் பதவி மோகம் கொண்டவர், இன்னாருக்கில்லை என்று கூறமுடியாது. அதிலும் இதுபோது காங்கிரசுக்குள் நடக்கும் காட்சியைக் கண்டால்போதும், மோகங்கொண்டோர் ஓர் புறம், கோபத்துடனிருப்போர் வேறோர்புறம், என்று பலவிதமான போக்கோர் போரிடுங் காட்சிதெரியும். காங்கிரஸ் கலகஸ்தானமாகிவிட்டது. நெருக்கடியும் நெஞ்சுக்குச் சோதனையும் நேரிடும்காலங்களில், காங்கிரசின் கதி இதுவாகவே இருக்கிறது. சூரத் காங்கிரசிலே "சடாக்கள்" பறந்தன! கயா காங்கிரசிலே கண்ணீர்! ஹரிபுரா காங்கிரசிலே அமர்க்களம்! கொள்கையை விளக்கும் வேளைகளில், காங்கிரசின் கோணல்வெளிக்கு வருகிறதுதான் வாடிக்கையாக இருந்துவருகிறது. இதற்கெல்லாம் காரணம், காங்கிரசுக்குள் இருக்கும் போலி ஒற்றுமை!

ஆச்சாரியார், காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து விலகி விட்டார். தமது தீர்மானத்துக்கு அங்கு ஆதரவில்லை, எனவே விலகுகிறாராம். ஆனால் தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலே கொண்டு வருகிறார். முடிவு பற்றி நமக்குக் கவலையில்லை. இந்த சம்பவம் காங்கிரசுக்குள் இருக்கும் கருத்துக் கோளாறுகளையும், பிளவுகளையும் வெளிப்படுத்துகிறதே, அதுதான் மக்கள் கற்கவேண்டிய பாடம்! இவ்வளவு தகராறுகளையும் வெளிக்குத்தெரியாமல், காங்கிரஸ் ஏடுகள் மூடிவைக்கின்றன வென்பதை மக்கள் இனியேனும் தெரிந்துகொள்ள வேண்டும். நரைத்தலையன், கூந்தல் கருக்கும் தைலம் தேடுகிறான், நரம்பு முறுக்கற்றவன் மன்மதக்குளிகையை நாடுகிறான், பல் இழந்தவனுக்குப்பொய்ப்பற்கள் தேவையாகிறது, அதுபோல் ஆரிய ஆதிக்கத்தை உண்டாக்கத் துடிக்கும் பேர்வழிகளுக்கு, மக்களை மயக்கும் பிரசாரம் தேவையாக இருக்கிறது, தேசியம், நாட்டுவிடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்று பேசுவதும், பதவி நமக்கு ஏன் என்று பசப்புவதும், மக்களை ஏய்க்கவேயாகும்.

அதிலும், நமது நாட்டுப் பார்ப்பனர், பதவி பெறுவதற்காக எத்தகைய "தியாகமும்" செய்யத் தயாராக உள்ளவர்கள்!

இராசாஜிசகலத்தையும் தியாகம்செய்தவர்! என்று தினமணியும் கூறுகிறது. வார்த்தைகளை அளந்து எழுதியிருக்கிறார் ஆசிரியர். சகலத்தையும்! கொள்கைக் கட்டுப்பாடு, சில சமயம் காலம் கற்பிக்கும் பாடம் ஆகியவற்றைக்கூட அவர் தியாகம் செய்தவர். இந்தி எதிர்ப்புக்காலத்திலே ஈவு இரக்கத்தையும் தியாகம் செய்தவர்!

பதவிமீது அவர்கொண்டுள்ள மோகமே, பாகிஸ்தானை ஆதரிப்பதாகக் கூறவைக்கிறது என்பதை. பாதந்தாங்கிகள் கூற வெட்கப்படும். நமக்கேன் அச்சம்! பதவிபெற அவர் செய்துவரும் பலசூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

காங்கிரசின் கொள்கை தமது ஆதிக்கத்துக்குப் பயன் படும் வரையில்தான் சென்னை மண்டலப் பார்ப்பனர், அதை ஒப்புக்கொள்வர். தமது ஆதிக்கத்துக்கு பயனில்லை என்றால், காங்கிரசோ, காந்தியாரோ, கட்டுப்பாடோ, எதுவோ, அவைகளைத்தூக்கி வீசுவர் வெளியே. மற்ற மாகாணங்கள் சட்டசபை புகவேண்டாம் என்றுரைத்த போது, இந்த மாகாண நிலைமை வேறு, எனவே சட்ட சபை புக வேண்டும் என்றுரைத்து பஞ்சகச்சத்தை இழுத்துக்கட்டிக்கொண்டு, பூணூலை உருவிக்கொண்டு பதவிவேட்டைக்குக் கிளம்பியவர், இம்மாகாணப்பார்ப்பனரே! 1935ம் ஆண்டு சட்டத்தை உடைக்கவேண்டும் என்று மற்ற மாகாணக் காங்கிரசுகள் உறுமிய வேளையிலும், கவர்னரை எமது நண்பர், வழிகாட்டி ஞானசிரியர் என்றுரைத்ததும் இந்த மாகாணத்துப் பார்ப்பனரே யாகும். அதுபோலவே இப்போதும், இந்த மாகாணநிலைமை வேறு, எனவே இங்கு மந்திரி சபை அமைக்கப்பட வேண்டும்என்று பார்ப்பனத் தலைவர் பதைக்கிறார். பதவிமீது அவருக்குப் பற்றேயொழிய பாகிஸ்தான் மீதல்ல!

## செய்யாறு ஜெயக்கொடி!

சென்னை மாகாணம் மற்ற மாகாணங்களைப் பார்க்கிலும் யுத்த ஆதரவில் முன்னணியில் நிற்கிறதென்பது, இம் மாகாணத்தில் மட்டும் இரண்டுகோடி வெண்பொற் காசுகள் கிடைத்ததைக்கொண்டு நன்கறியலாம். இதற்குக் காரணம், யுத்தம் இந்தியாவை நெருங்கப்பட்டதென்பதைக் குறிக்கோளாகக் கொண்ட நமதியக்கத் தலைவர்கள். அதற்காகப் பொது மக்களிடையே செய்து வந்த பிரசாரத்தின் வலுவேயாகும். காங்கிரசுக்காரர்களால் தூண்டப்பட்ட குறும்புப் பிள்ளைகள் 'யுத்தத்திற்குப்பணம் தொடாதே' என்று சுவர்களில் எழுதிய எதிர்ப்பு விளம்பரங்கள் ஒருபுறமும், காங்கிரஸ் தலைவர்களும தொண்டர்களும் யுத்தத்தை ஆதரிக்கப்படாதென்பதற்காகச் சிறை சென்று பொது மக்களிடையே யுத்த எதிர்ப்புணர்ச்சியை உண்டாக்க முயன்ற கிளர்ச்சி மற்றோர் புறமும் சூழ்ந்துள்ள நெருக்கடிகள் அனைத்தையும் சமாளித்துக் கொண்டு நமதியக்கத் தலைவர்கள் நமது நாட்டு நலன் குறித்துபிரிட்டிஷாருக்கு உதவவேண்டுமென்றஎண்ணத்தோடு பொதுமக்களின் ஆதரவைத்தேடிக்கொண்டதே இப பெருந்தொகை வசூலுக்குக் காரணமாகும். உதாரணமாக வடாற்காடு மாவட்டத்திலுள்ள காங்கிரஸ்காரர்களின் யுத்த எதிர்ப்புக் குறும்புத்தனம் மிகவலுவாயிருந்ததென்பதை நாம் அறிவோம். அப்படி இருந்தும், வடாற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளுள்ளும் செய்யாறுத் தாலுகாவில்மட்டும், சென்னைக் கவர்னா பிரபு யுத்த நிதிக்காகச் சென்றிருந்த போது 18500க்கு மேற்பட்ட வெண்பொற்காசுகள் கிடைத்துள்ளது. இதற்காகப் பெருமுயற்சி எடுத்துப் பொதுமக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்றுக் கட்டாயம் எதுவுமின்றிப் பண வசூல் செய்த ரெவென்யு டிவிஷனல் ஆபீசர் தோழர் V. கிருஷ்ணசாமி, M. A. அவர்களைப் பாராட்டுகிறோம். செய்யாறுத் தாலுக்கா திருவத்திபுரத்திலுள்ள நமதியக்கத் தோழர்களான சுப்பராய முதலியார் ஆனரரி மாஜிஸ்ட்ரேட். M. துரைசாமி முதலியார், ஆதிகேசவலுநாயுடு முதலான வியாபாரிகள் உள்ள ஒரு இடத்தில் இப்பெருந்தொகை வசூலானதைப் பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. அவர்களின் தொண்டுகளைச் சர்க்கார் அறிய வேண்டுகிறோம். மேலும் இங்கு நமதியக்கத் தோழர் M. கந்தசாமி யுத்தநிதி வசூலுக்காக அரும்பாடு பட்டதறிந்து அகமழ்கிறோம். இத்தகைய தோழர்கள் இருக்கும் வட்டாரம் சுகுணம் படைத்த ரெவன்யூ டிவிஷனல் அதிகாரியுடன் ஒத்துழைத்து வெற்றி பெற்றது, காணவும் கேட்கவும் களிப்பூட்டுவதாகும். நமது பாராட்டுதல் அவர்களுக்கு உரித்தாகுக. நாட்டிலே யுத்த சம்பந்தமாக நன்மை எதுஞ் செய்யாதாரான காங்கிரசார் கிடக்கட்டும் ஒருபுறம், செய்யத்தக்கனவைகளைச் செம்மையுறச் செய்த செய்யாறுகள் ஜெயகொடி காட்டிவருகின்றன!

## ஒலிமுகமது பேட்டையில் கூட்டம்

28—4—42 மாலை, காஞ்சிபுரம் ஒலிமுகமது பேட்டையில், தோழர் A. K. தங்கவேலர் தலைமையில், கைத்தறி நெசவாளர் குறைகள்பற்றி கவனிக்கவும், அரசியல் நிலமைபற்றி விளக்கவும் நடந்த பொதுக்கூட்டத்தில் சென்னை ஜனாப்கள் அப்துல்மஜீத், அப்துல்லப்பை ஆகியோரும் தோழர்கள் கலியாண சுந்தரம், S. V. லிங்கம், C. N. அண்ணாதுரை ஆகியோரும் பேசினர்.

## மேதின மொழிகள்!

### தோழர் ஸ்டாலின் கூறுகிறார்:

ஹிட்லர், கொயரிங், ஹிம்ளர், கொயபிள்ஸ், ரிப்பன்டிராப் முதலிய ஜெர்மன் தலைவர்கள், ஜெர்மன் முதலாளிகள் ஏவி விட்ட வேட்டை நாய்கள்! நாஜிகள் இரத்தம் சிந்துவது ஜெர்மன் முதலாளிகளின் செல்வம் பெருகுவதற்காகவே.

ஜெர்மன் சேனை 10மாதங்களில் மிக்க பலவீனமாகிவிட்டது. ரஷியா பூராவும் பிரம்மாண்டமான படை வீடாகிவிட்டது. எதிரிகள் ரஷியாவில் பெரும் பகுதியிலிருந்து பின் வாங்கும்படி செய்துவிட்டனர்.

பிரிட்டனும், அமெரிக்காவும்! ஹிட்லரைத் தோற்கடிக்க நமக்கு அரிய தளவாட உதவி செய்கிறார்கள்.

நாஜீசத்தை எதிர்க்கும் தோழர்களுக்குத் தோழர் ஸ்டாலின் தமது வாழ்த்துரையை மேதினச் செய்தி மூலம் அளிக்கிறார். அவருடைய உள்ளம் களிக்க, கரங்கள் மேலும் பலம்பெற, நம்மாலான உதவிகளைச் செய்வோம் என்ற உறுதியைப் பெறுவீராக. வாழ்க சோவியத்! வாழ்க ஸ்டாலின்!!

## பழநியம்மை, கணேசன்
### தமிழ்த் திருமணம்.

22—4—42 புதன்கிழமை காலை 10-மணிக்கு சிதம்பரம் தெற்குவீதி, 63ம் இல்லத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் பேராசிரியர் திரு கா சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்கள் தலைமையில், சிதம்பரம் தாலுக்கா வன்னிகுல க்ஷத்திரிய சமூகத்தலைவர் திரு சு. பூவராகன் அவர்கள் மூதன் மகன் திரு கணேசனுக்கும். பெத்துநாய்க்கன் பாளையம் திரு இராமசாமிக்கவுண்டர் மூதன் மகள் திரு பழநியம்மைக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் புரோகிதமின்றி, தமிழ் முறைப்படி சிறப்புற நிகழ்ந்தது. உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பலபெரியார்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர் மணமக்களை வாழ்த்தி கீழ்க்கண்டவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. தமிழர் தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி. கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் பண்டித ந. மு வேங்கிடசாமி நாட்டார். பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார். வித்துவான் க. வெள்ளை வாரணனார், பொருளாதார நிபுணர் Dr. B. V. நாராயணசாமி நாயுடு, கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டர் P தியாகராசன், கருவூர் வித்துவான் செ. மகாலிங்கம், உதகை கு. சீனிவாசன், புதுக்கோட்டை A கிருஷ்ணசாமி B. A. (Hons) L. T., பிச்சாவரம் T. A. S. சோழனார், ஞானியார் மாணவர்கழகம் வித்துவான் ந ஆறுமுகம், அனந்தபுரம் த. முத்துரத்தினம், பரங்கிமலை இரத்தினசாமி, மிலட்ரோ அ. இளங்கோவன், பூனமல்லி ஆறுமுகசாமி, திருநாவலூர் இராசமாணிக்கம், திருமுட்டம் சுந்தரமூர்த்தி, கரந்தை சானிட்டரி இன்ஸ்பெக்டர் நடனசபாபதி, நாகை இராமசாமி. பரங்கிப்பேட்டை டாக்டர் தியாகராசன் L M P. முதலியவர்கள்.

வாழ்த்துப்பாக்கள் படித்தளித்தவர்கள்:— அன்னியூர் திருநாவுக்கரசு சழகச்சார்பாக சழகத்தலைவர் திரு பசையப்பன். கரந்தைப்புலவர் கல்லூரி ஆசிரியர் கோ. சி. பெரியசாமி. பண்ருட்டி தமிழ்ப்பண்டிதர் திரு யுக்கிரிசாமி ரயினர், குப்பங்குழி முத்துக்குமாரசாமி, தில்லை இளங்கோ சழக அமைச்சர் அன்பழகன்.

மணமக்களை வாழ்த்திப்பேசியவர்கள்:— தில்லைத்தமிழர் நலவுரிமை சங்கம், தன மதிப்பக்சழகம் சார்பாக அன்பழகன், திருச்சி சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் வித்துவான் பெரியசாமி. புவனை திரு சிங்காரவேலு சுவாமிகள், பின் மணமக்களுக்கு பலரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

கடைசியாகத் திரு சு. பூவராகன் அவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தோர்கட்கு நன்றி கூறினார். திருமணத்தின் நினைவுக்குறியாக விடுதலைக்கு ரூபாய் 3—0—0, சண்டே அப்சர்வருக்கு ரூபாய் 1—0—0. திராவிடநாடு பத்திரிகைக்கு ரூபாய் 1—0—0 நன்கொடையாக அனுப்பப்பட்டது

## காஞ்சிச் செய்திகள்

### பொதுக் கூட்டம்

பாகிஸ்தானமும் ஆச்சாரியாரும் எனும் பொருள்பற்றி, தோழர்கள் அப்துல்மஜித் A K தங்கவேலர். S. V. லிங்கம், C. N. அண்ணாதுரை ஆகியோர். திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு. ஆடிசன்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. எராளமான திராவிட. இஸ்லாமியத் தோழர்கள் கூடினர். மாஜிமந்திரி தோழர் S. முத்தையமுதலியார் தலைமை வகித்தார்.

### கேரம் போட்டி

சின்னக்காஞ்சீபுரம் பார்ப்பனரல்லாதார் இளைஞர் சழகத்தில் கேரம் விளையாட்டுப் போட்டி சென்ற வாரம் நடைபெற்றது. அதன் பரிசளிப்பு விழா, வருகிற ஞாயிறன்று கழகக் கட்டிடத்தில் நடைபெறும்

### பொன்னுசாமியார் புதுக்கடை

பிரபல நகை செய்தொழில் ஸ்தாபனக்காரரான சென்னை C. V. பொன்னுசாமி ஆச்சாரியார். காஞ்சிபுரத்தில் ஓர் கிளை ஸ்தாபனம் ஏற்படுத்தியுள்ளார். அந்த விழாவுக்கு கலெக்டர், மேயர். முதலானவர்களும், காங்கிரஸ். ஜஸ்டிஸ். லீக் தலைவர்களும் விஜயம் செய்து, தோழர் ஆச்சாரியாரின், அருமையான வேலைப்பாடுகள் பற்றிப்புகழ்ந்துரைத்து அவரது ஸ்தாபனத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

### A. R. P.

சென்னையில் இரவு 10-மணி வரையில் இனி விளக்குகள் இருக்குமென்று ஏற்பாடாகிவிட்டபடியால், காஞ்சிபுரத்தில், முழு விளக்கணைப்புத் திட்டத்தை மாற்றி. A R P. கட்டுதிட்டத்தைச் சற்று தளர்த்தி இரவு 10-மணிவரை விளக்குகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. A. R. P. சங்கொலிப்பு, பூராநகருக்கும் நன்குகேட்காததால். மேலும்இரண்டு (சயரன்கள்) சங்குகள் அமைக்க வேண்டுமென்றும் மக்கள் கோருகிறார்கள். A. R. P அதிகாரிகளும் சர்க்காரும் இதனைக் கவனிக்க வேண்டுகிறோம்


# தர்பார் ரெஸ்டாரண்ட்
## (டீ கிளப்)
## சுவை மிக்க நாகரீக உணவுகள்!
### சுகாதார முறையில் தயாரிக்கப்படும் இடம் இதுவே!

ஒரு முறை வருவோர்! என்றும் மறவார்!

பெரியகாஞ்சீவரம் ஹஜரத் ஷா ஹமீத் அவுலியா தர்கா எதிரில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இந்த ரெஸ்டாரண்டுக்குத் தமிழ்—முஸ்லீம் தோழர்கள் பெருவாரியாக வந்து ஆதரிக்கக் கோருகிறோம்.

☞ மதராஸ் A. K. & Sons, புரொப்ரைட்டர்கள்.

# போர்ப் பொறிகள்

### அந்தமானைத் திரும்பப் பிடிக்க.

இந்து மகாசமுத்திரத்தில் உலவி, கொழும்பு மீது விமானங்களை ஏவி, காகிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களைத் தாக்க விமானங்களை அனுப்பிய ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் சென்ற இடம் தெரியவில்லை. அவைகள் ஒருசமயம் அந்தமானுக்கோ, சிங்கப்பூருக்கோ, பெட்ரோல் போட்டுக்கொண்டு வரச் சென்றிருக்கக்கூடும் என்று ராய்ட்டர்நிருபர் கூறுவது, அவ்வளவு பொருத்தமாக இல்லை. போதுமான அளவு பெட்ரோல் நிரப்பிக்கொள்ளாமல் ஜப்பானியர், பாய்ந்திருக்க மாட்டார்கள். சிலோனில் இருக்கும் பாதுகாப்பு முறைகளையும், பிரிட்டிஷ் விமான, கடற்படையின் விறு விறுப்பையும் கண்டு தான், ஜப்பானியக் கடற்படை தலைமறைவாகத்திரிய வேண்டி வந்திருக்கும். இந்தச் சமயத்தில், பிரிட்டிஷ் கடற்படை, அந்தமானைத் திரும்பப் பிடித்துவிட்டால், நமது கடலோரத்தில் ஜப்பானியக் கப்பல்கள் உலவிச் சேட்டைசெய்யாமல் இருக்குமாறு அடக்கக்கூடும். ஜப்பானியக் கடற்படை நமது கடலில் உலவும்வரை, உள்நாட்டில் கலக்கம் இருந்துதான் வரும்.

### பழுப்பு ஒளி!

எனவேதான் சிங்காரச் சென்னையில் இருள் சூழ்ந்து கொண்டு ஏழு இலட்சம் பேர் எழிலுடன் இருந்த இடத்தில், சாப்பாடும் சில்லறையும் கிடைப்பதும் சங்கடமாயிற்று. இப்போது மீண்டும் விளக்குகள் எரிகின்றன, ஆனால் இரவு 10-மணி வரையில் தான், அதுவும் மங்கலாக! மக்கள் உள்ளமும் அதே நிலைமையில் தான் இருக்கிறது.

### வேவல் உறுதி

இந்தியாவின் பாதுகாப்புக் கதிபதியாக உள்ள ஜெனரல் வேவல், இங்கு விமானப்படை கடற்படை தரைப்படை ஆகிய மூன்றும் நாளுக்குநாள் பலப்பட்டு வருவதாகவும், எதிரியை முறியடிப்பது திண்ணமென்றும் கூறியுள்ளார். இதற்காக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் தத்தமது கடமையைச்செய்ய வேண்டுமென்று கூறுகிறார்.

### நம்பிக்கை!

இந்த உறுதியுடன் சென்னைக் கவர்னரின் ரேடியோ சொற்பொழிவு, விசேஷ நம்பிக்கையை யூட்டி இருக்கிறது. பல்வேறு இடங்களிலும் இப்போது நமது நாட்டுப்பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள படைகள் பவனி வருவதைக் காண்கிறோம். இந்திய சிப்பாய்கள் வீரத்தில் சளைத்தவர்களல்ல.

### சா. சண்முகம்

இந்தியாவுக்குத் தேவையான யுத்த தளவாடங்கள் அமெரிக்காவிலிருந்து வந்தவண்ணம் உள்ளன. அமெரிக்கத் துருப்புகள்கூட இந்தியாவில் இருப்பதாக கர்னல் ஜான் சன் கூறுகிறார். இந்தியாவுக்கு இத்தகைய மகத்தான உதவி அமெரிக்காவிடமிருந்து கிடைத்திருக்கிறது. இந்த அரிய பணியை வெற்றிகரமாக முடித்துக்கொடுத்தவர், நமது சர். சண்முகம், என்பதை எண்ணிப்பார்க்கும்போது, குதூகலமும் பெருமையும் அடையாத தமிழன் இருக்கமுடியாது!

### யுத்தம் ஆரம்பமாம்!

நமது இன்னல்கள் நீங்கி, இனியேனும் இதம் கிடைக்குமா என்று நாம் யோசிக்கும் இந்தச் சமயத்திலே ஜப்பானியப் பிரதமமந்திரி ஜெனரல் டோஜோ, உண்மையான போர் இனித்தான் ஆரம்பமாக இருக்கிறது, சோதனைக்காலம் பிறக்கிறது என்று பேசுகிறார் தமது மக்களுக்கு. இன்னம் எவ்வளவு நாசம் செய்யவேண்டுமென்பது அவரது நினைப்போ யார் கண்டார்கள். அவரது எண்ணங்கள் தூளாகவேண்டுமானால், ஜப்பானிய எகாதிபத்தியத்தின் இறுமாப்பு இடிந்துபோக வேண்டுமானால், டோக்கியோ தூளாக வேண்டும், நேசநாட்டு விமானங்கள் ஆங்கு வட்டமிட வேண்டும்.

### வசந்தமும் வாட்டமும்

அங்ஙனம், பிரிட்டிஷ்விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கத் தொடங்கினதால் தான், வசந்தந்தோன்றிய பிறகும் ஹிட்லரின் வாட்டம் வளருகிறது! வசந்தம் வரட்டும், ரஷியாவை ஒரு கை பார்க்கிறேன் என்று கூறிய ஹிட்லர், அடுத்த மாரிக்காலத்திலே, ஜெர்மன் படைகளுக்கு இந்த மாரியின்போது ஏற்பட்ட விதமான கஷ்டம் ரஷியாவில் ஏற்படாது என்று கூறுகிறார். அடுத்த மாரிக்காலம் வரையிலே அமளி நடக்கும் ரஷியாவிலே. என்கிறார் ஹிட்லர்! இவர்தான் ஆறே வாரத்தில் மாஸ்கோவில் சுவஸ்திகக்கொடியைப் பறக்க விடுவதாகக் கூறிய மாவீரர்!! கனல் கக்கும் பேச்சு, ஆர்ப்பரிப்பு, இரகசிய ஆயுதம்என்று மிரட்டுவது முதலிய படாடோபமின்றி ஹிட்லர், அடக்க ஒடுக்கத்துடன், ஆயாசத்துடன் பேசி இருக்கிறார் இந்த முறை.

### எங்கும் இடி

ரஷிய களத்திலே மட்டுமல்ல இடி! யூகோ நாட்டிலே, பிரான்சில் சில பகுதிகளில், டென்மார்க்கில், ஹிட்லருக்குத் திரும்பிப் பார்க்குமிட மெங்கும் இடிதான் கிடைக்கிறது. ஜெர்மனிக்குள்ளேயே ஹிட்லருக்கு எதிர்ப்பு, மக்களிடை மனக்கசப்பு, ராணுவ அதிகாரி களிடையே மாச்சரியம் மூண்டுவிட்டது. ஆகவேதான், எதை வேண்டுமானாலும் செய்ய, யாரை வேண்டுமானாலும் வேலையிலிருந்து தள்ள, தனக்கு அதிகாரம் வேண்டுமென்று ஹிட்லர் ரீஷ்டாக்கில் சொற்பொழி வாற்றுகிறார்.

### விச்சி விஷமி

பிரிட்டிஷ்துருப்புகள் சிறுசிறு படையெடுப்புகளை வெற்றிகரமாக நடத்துவதுகண்டு கிலிகொண்ட ஹிட்லர், நார்வேயில் முஸ்தீப்புசெய்திருப்பதுடன், பிரான்சிலே லவால் ஆட்சியை அமைத்துவைத்திருக்கிறார். லவால் நெடுநாட்களாகவே பிரிட்டனிடம் துவேஷங் கொண்டவர். நாஜியின் நாட்டிய பொம்மை! இந்த விச்சி விஷமியைக்கொண்டு பிரான்சு கடற்படையைக் கைப்பற்ற ஜெர்மன் சர்வாதிகாரி எண்ணுகிறார். வீரம் போய், விஷமத்தனத்தில் இறங்க வேண்டிய வேளை தோன்றி விட்டது ஹிட்லருக்கு,

### பழய சீட்டு

எப்படி ஹிட்லர் ஆர்ப்பாட்டம் கிளம்பினதும், முசோலினிபற்றிய பேச்சு மூச்சே அடங்கிவிட்டதோ அதுபோலவே எப்போது ஜப்பான் தாவிக்குதித்து, மலாய், சிங்கப்பூர், ரங்கூன் ஆகிய இடங்களைப் பிடித்ததோ அப்போதே ஹிட்லர், பழய சீட்டாகிவிட்டார். பத்திரிகைகளிலே இப்போது ஜப்பானே முதல்இடம் பெற்றுவருகிறது. இது ஹிட்லருக்குப் பிடிக்குமா! ஜப்பானின் "வெற்றிகள்" நமக்கு வேதனையை உண்டாக்கின, ஜெர்மன் தலைவருக்கு வயற்றெரிச்சலை உண்டாக்கிவிட்டன. வெளியே சொன்னால் வெட்கக் கேடு என்று சும்மா இருக்கிறார்.

### அட்மிரல் ஹிராய்டி

எனும் ஜப்பானியர், 1942, மார்ச்சுமாதத்தில், **பாஜு கேசரோன்** என்ற பத்திரிகையில், "இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் நமதுபிடியில் கொண்டு வந்தே தீரவேண்டுமென்று எழுதி இருக்கிறார். மார்ச் 13ந்தேதி ஜெர்மன் ரேடியோ, கிழக்கு ஆசியாவிலே, புது அமைப்பு ஏற்படுத்துவதற்காக இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் பிடித்தே தீரவேண்டும் என்று கூறுகிறது. இந்த மனக்கோட்டைகளைத் தூளாக்க, நேச நாடுகள் முனைய வேண்டும்.

### பார்னட் நோவர்

என்ற பிரபல அமெரிக்கர், வாஷிங்டன் போஸ்ட்டில் எழுதியிருக்கிறார், கிழக்குநாட்டுப் போர்க்களம் மிக மிக விரிந்து இருக்கிறது, இணையற்றதாக இருக்கிறது, இங்கு, போரால் பாதிக்கப்படும் மக்களின் ஜனத்தொகை அபாரம்; மற்றக் களங்களிலே உள்ள ஜனத்தொகையைவிட மிக மிக அதிகம், எனவே இந்த கிழக்குநாட்டுக்களத்தின் முடிவைப்பொறுத்தே உலக யுத்தத்தின் போக்கு இருக்கிறது என்று. இத்தகைய கருத்து இருப்பதனால்தான் அமெரிக்கா, இந்தியாவைப் பாதுகாக்கவேண்டியதும் தனதுகடமை என்று தீர்மானித்துவிட்டது: 40. கோடி இங்கு, 45 கோடி சீனாவில், இவ்வளவு மக்களின் எதிர்கால வாழ்வும் இன்று சோதனைக்குள்ளாக்கி இருக்கிறது. 85-கோடி மக்களின் வாழ்வை வதைக்கும் ஜெர்மன் ஜப்பானிய சதிகாரர்களை, கண்டிக்காதவர்களேயில்லை என்னலாம். இன்று ஆபத்து தலைமீது தாண்டவமாடிக் கொண்டிருப்பினும் இறுதி வெற்றி நேச நாடுகளுக்குத்தான் என்று கூறுவது வெறும் பேச்சல்ல! அமெரிக்காவின் தளவாடம் இமயம்போல் குவிக்கப்பட்டு வருகிறது!

### இறுதியில் வெற்றி.

ஹிட்லர்பிடித்த இடங்களிலோ புரட்சிப்பொறிகள் பறக்கின்றன, ஜப்பானோ, மிக்கஆள் நஷ்டம் பொருள் நஷ்டத்தை ஈடுகொடுத்தே, தற்காலீகமான வெற்றிகளைப் பெறுகிறது. ஜனநாயக நாடுகள், தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டன, துரிதமாகத் தமது சக்தியைத் திரட்டுகின்றன, முழுசக்தியுடன் நேசநாடுகள் நிற்கும்போது, சர்வாதிகார நாடுகள் அடியற்ற பனைபோற்சாயும் என்பதில்ஐயமில்லை! நியூயார்க் ஹெரால்டு டிரைப்யூன் என்ற பத்திரிகை இதற்கான பல காரணங்களை விளக்கி எழுதியிருக்கிறது. பகுத்தறிவாளர்கள் போற்றக்கூடிய ஐந்து விஷயங்களைக்கூறி ஹெரால்டு டிரைப்யூன், நேசநாடுகள் வெற்றிபெறும் என்பதை விளக்குகிறது.

1. நேசநாடுகள் தமதுமுழுபலத்தையும் திரட்டியதும் இத்தாலியை மூலையில் உட்காரவைத்துவிட்டு, ஜெர்மனியை முடமாக்கி, பிறகு, முழு மூச்சாக ஜப்பான்மீது பாய்ந்து, ஜப்பானை நசுக்கும்.

2. ரஷியாவுக்கு மேலும் மேலும் தளவாடங்களைத்தந்துதவுவதுடன், விமானத்தாக்குதலையும், சிறு கடற்படைத்தாக்குதலையும் விருத்தி செய்து, பிரிட்டன், ஜெர்மனியின் இடுப்பை முறிக்கும்.

3. நேசநாடுகளின் உதவியைப்பெற்றுக்கொண்டு ரஷியா, சைபீரிய முனையில் உள்ள ஜப்பானியப் படைகள் கலைக்கப்படும்படியான வேலையைச்செய்யும்.

4. ஹிட்லரிடம் பிடிபட்டுள்ள, டென்மார்க், நார்வே, பெல்ஜியம், போலந்து, செக்கே, யுகோ நாடுகள் ஆகிய இடங்களிலே, ஹிட்லருக்கு எதிரிடையாகக் கிளம்பும் எதிர்ப்புகளை, நேசநாடுகள், பயன்படுத்திக்கொண்டு, ஹிட்லர் ஆதிக்கத்தை அடித்தொழிக்கும்.

5. விச்சியின் விஷமத்தை வேரறுக்க, டி, காலே கட்சியை நேசநாடுகள் ஆதரித்து, தக்க உதவி அளிக்கும். மேலும், மேற்படி பத்திரிகை, கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறி, நேசநாடுகள் வெற்றி பெறுமென்பதற்கான ஆதாரங்கள் இவை என்பதை விளக்கி எழுதுகிறது.

1. எதிரியின் விமானபலத்தைவிட அதிகமான விமானபலத்துடன், நேசநாடுகள், எதிரியைத்தாக்கும் என்று, மிஸ்டர், பெவின் கூறுகிறார். மிஸ்டர் பெவின், பிரிட்டிஷ் தொழிலாளரின் தோழர், சர்ச்சலின் சகா! அவருடைய பேச்சு, ஆழ்ந்த கருத்துடன் வெளி வருவதாகும்.

2. பிரிட்டிஷ் வெடிகுண்டு வீசும் விமானங்கள், ரூர்பிரதேசம், பிரான்ஸ், இத்தாலி ஆகிய பரந்த மண்டலங்களில் வட்டமிட்டு, வெற்றிகரமாகத் தாக்கி வருகின்றன. இந்தப்போர்முனை 500-மைல் அளவுள்ளது.

3. ஐரோப்பாவின் மேற்குக்கரையில், அடிக்கடி, சிறு சிறு பிரிட்டிஷ் கடற்படை சென்று வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்துகின்றன.

4. பிரபல ராணுவ நிபுணரும், அமெரிக்க சேனாதிபதியுடன் கலந்து பேசியவருமான **மவுன்ட் பேடன்** பிரபுவை இத்தகைய கடற்படைத் தாக்குதலின் தலைவராக இருக்குமாறு மிஸ்டர் சர்ச்சில் நியமித்திருக்கிறார். இதிலிருந்து இத்தகைய தாக்குதல் வலுக்கும் என்பது தெளிவு.

5. அமெரிக்கத் தளவாட இரவல் சட்டஅமுல் அதிகாரி மிஸ்டர் ஹாப்கின்ஸ், லண்டனில், சோவியத் தூதர் தோழர் மெய்ஸ்க்சியுடன் கலந்தாலோசித்திருக்கிறார்.

6. மூர்மான்ஸக் துறைமுகத்தில், அமெரிக்க, பிரிட்டிஷ், டச்சு கப்பல்கள் தளவாடங்களுடன் வந்து சேர்ந்துள்ளன வென்று மாஸ்கோ ரேடியோ தெரிவிக்கிறது.

7. ஜப்பானே! உஷார்! ஒப்பந்தப்படிநட என்று ஜப்பானை எச்சரிக்கை செய்கிறது, ரஷிய பத்திரிகையான பிராவ்தா!

8. ரஷியாவிலுள்ள போலந்து படைகளின் தலைவர், ஜெனரல் ஆண்டர்ஸ் லண்டனில் உள்ள போலந்துதலைவர் சிக்ரோஸ்கியுடன் கலந்து பேசவந்திருக்கிறார். அவர் ஏறிவந்த விமானம், ஸ்டாலினால் அவருக்குத்தரப்பட்டதாம்!

9 நார்வேயில் உள்ள நாஜி அடிமைகளுக்கு உள்நாட்டு எதிர்ப்பு வலுத்துவிட்டதால், ஏதாவது சமாதானஞ் செய்துகொண்டு குழப்பத்தைக் குறைத்துக்கொள்ளும்படி, பெர்லின், நார்வே நாஜி அடிமைகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.

10. இத்தாலியில், முசோலினிபாடு திண்டாட்டமாகிவிட்டதாக, இத்தாலியசேனை வட்டாரம் செப்புவதாக டெயிலிமெயில் தெரிவிக்கிறது.

11. ரஷிய களத்திலே நாஜிகளுக்குத்தோல்வி மேல் தோல்வி துரத்திக்கொண்டு வருகிறது.

12. நாஜிகளுக்கு உதவும், ஹாங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகள்மீது போர்தொடுக்கப் போவதாக அமெரிக்கா தெரிவிக்கிறது.

13. போர்முடிந்தபின் உலக அமைப்பு எங்ஙனம் இருக்கவேண்டுமென்பது பற்றி நேசநாடுகள் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றன. இதிலிருந்து இறுதி வெற்றியில் நேசநாடுகள் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கை தெரியவருகிறது. இருண்ட உலகில்மீண்டும் ஒளி தோன்ற, இழந்த இன்பத்தை மக்கள் மீண்டும் பெற, கலக்கம் போய் களிப்பு உண்டாக, நேசநாடுகள் வெற்றிபெற்றுத்தான் தீரவேண்டும். அதற்காக உதவுவதே உத்தமர் கடமை, உலுத்தரின் செய்லை உலகம் உதாசீனம் செய்யும், வெல்க ஜனநாயகம்! வீழ்க நாஜீசம்!!

நீசுப் போய்கை. (2ம் பக்கத் தொடர்ச்சி.)

செய்தீர்கள்! மமதையோடிருந்தான் என்பதற்காக ஒருமன்னனை மாளிகைக்கு எதிரே தூக்கிலிட்டீர்கள், மற்றோர் மன்னனை நாடு கடத்தினீர்கள், மகுடாபிஷேகத்திற்கு முன்னாள், ஓர்மன்னனின் காதலுக்கும் கட்டுப்பாடு விதித்தீர்கள்! இத்தகைய நீங்கள், எங்களைப்போல், நடமாடக் கூடாத நாயாடிகளாய், சஞ்சரிக்கமுடியாத செரமர்களாய், தீண்டப்படாதவர்களாய், சூத்திரராய் வாழ்ந்துகொண்டு, ஒருகுலத்தின் பொதி மாடுகளாய், சனாதனத்துக்குச் செக்கு மாடுகளாய், இருக்கச் சம்மதிப்பீர்களா! என்று கேட்கிறேன்.

மாட்டுக்கு மூக்கணாங்கயறிட்டு வேலைவாங்குவது போல், குதிரைக்குக் கடிவாளமிட்டு உழைக்க வைப்பதுபோல், யானையை, சிறு அங்குசத்தால் குத்தி அடக்கிவைப்பதுபோல், ஆரியம் எங்களை, பாவபுண்ணியம், மோட்சம் மறுஜென்மம், உயர்ந்தவன் தாழ்ந்தவன், தேவன் மானிடன், என்று பல கற்பனைகளைக் கூறி அவைகளால் எமது இனமக்களின் மனதில் தளை பல பூட்டி அடக்கி ஆளுகிறது. காட்டு அரசனும் சிங்கம் கூட்டிலடைபட்டால், என்ன செய்யும்! நாங்கள், ஆரியச்சிறையில் இருக்கிறோம் அவதியுறுகிறோம்! வெளியே நின்று வேடிக்கை பார்க்கும் வெள்ளைக்காரர்கள், குறும்பன்கோல் கொண்டு சிங்கத்தைக் குத்திப்பார்ப்பதுபோல், கேலியும் கண்டனமும் செய்கிறார்கள்! சிங்கத்தின் சீற்றம் அதிகரிக்கிறது! காலத்தின் வேகத்தால் கூண்டின் கம்பிகள் துருப் பிடித்துள்ளன! ஒரு பெருமுயற்சிதான் தேவை, கம்பிகள் தவிடுபொடியாக, சிங்கம் வெளிக்கிளம்ப! வெளிவரும்போது, தயவுசெய்து துரைமார்களே, எதிரேநின்று இரையாகாதீர்கள். ஒதுங்கி நில்லுங்கள், ஒய்யாரம் பேசியது போதும்.

சர்வதேச சங்க இலட்சியங்களென்ன, ஜனநாயக நாடுகளின் கூட்டுறவு என்ன, உலக 'சகோதரத்துவமென்ன, இத்தகைய ஏட்டுச்சுரைக்கு எண்ணாயிரம் வியாக்கியானம் எழுதும்மெயில், இந்த மாகாணத்திலுள்ள, பார்ப்பனர் அல்லாதார் பிணக்குபோக, இதுவரை அன்போடு அறிவுங்கலந்த உரை எழுதியதுண்டா? இங்கு சேரியில் சிதையும் மக்களிடம் சிரத்தை காட்டிற்று! ஜாதி அகம்பாவத்தைக் கண்டித்ததுண்டா! எங்கிருந்தோ ஒருமேயோ வருவதும் எள்ளி நகையாடுவதும், அதைக்கண்டு, என்செய்வது இங்கு நிலைமை அப்படித்தான் இருக்கிறது அதனைச்சரிப்படுத்தவே ஆங்கில அரசு இருக்கிறது என்று கூறிக் கொண்டு, கூடாரமடித்துக்கொண்டிருக்கவும் தெரிகிறதேயொழிய, பிணக்கும் பேதமும், பூசலும் ஏசலும், ஏன், எப்படி எப்போது ஏற்பட்டது என்று எடுத்துரைத்து, அவைபோக வழிகூறியதுண்டா?

ஆச்சாரியாரின் அதிகார மோகம் அனைவரும் அறிந்தது! அவரது சகாக்களும் தெரிந்து கொண்டனர். பசித்தவன் புசிக்க பாயாசமா வேண்டும்? எச்சில் இலைமீதும் தாவுகிறான். ஆச்சாரியாரின் பதவிப்பசி அவரைப் பத்தையும் மறக்கச்செய்து விட்டது. எப்படியேனும் பதவியில் அமரவேண்டு மென்பதற்காக ஏதேதோ திட்டம் தயாரிக்கிறார். அதிலே ஒன்று, பாகிஸ்தானை ஆதரிப்பதாகக் கூறும்பசப்பு மொழி. இதுபற்றிப் பெரியார் ஒரு அறிக்கை வெளியிட்டார்! வேதியர் கூட்டம் சும்மா இருக்கிறது, வெள்ளை எடுதான், வெடுக்கெனக் கடிக்க ஓடிவருகிறது. கேளுங்கள் தோழர்களே, "வகுப்பு வாதம், விஷயத்தைப் பரிசீலித்து முடிவு செய்யும் பண்பையும் பாழாக்கிவிடுகிறது என்பதற்குப் பெரியாரின் அறிக்கை ஒரு எடுத்துக்காட்டாம். விஷநீர் பெருக்கெடுத் தோடுகிறதாம் நமது கட்சியில். பார்ப்பனரிடம் பார்ப்பனரல்லாதாருக்குள்ள சந்தேகங்களை பெரியாரின் அறிக்கை மீண்டும் கிளறிவிடுகிறதாம், வகுப்புப் பூசலுக்குத் தூபமிடுகிறதாம், 3% மக்கள் 97% மக்களை அடக்கி ஆளும் பழயகதை மீண்டும் பேசப்படுகிறதாம். இவைகள் காலத்துக்கேற்ற தல்லவாம். பெரியாரின் அறிக்கை பிறி தோரிடமிருக்கிறது, படித்துவிட்டு, பேதமை ஆங்கில ஏட்டைத் தோழமை கொண்டிருப்பதைக் காணுங்கள். ஆச்சாரியார், பதவி பெறுவதற்காகவே புதியதோர் சூழ்ச்சி செய்கிறார் என்று பெரியார் கூறியிருக்கிறார். மாமனைத்திட்டினால் மார்தட்டிக்கொண்டு சண்டைக்குக் கிளம்பும் மருகன்போல, மெயில் இதற்காகச் சண்டைபிடிக்கிறது. பதவி வேட்டைக்காக ஆச்சாரியார் இப்படிச் செய்தார் என்று எப்படிக் கூறலாம், என்று கொக்கரித்துவிட்டு, பதவிக்காகத்தான் இதனைச் செய்கிறோம் என்று ஆச்சாரியாரின் கூட்டமே கூறிவிட்ட பிறகு, நீங்கள் ஏன் குத்தலாகப்பேசுவது என்று மெயில் கேட்கிறது. உள்ளதைச் சொன்னால், யாருக்கோ கோபம் வரும் என்பார்களே அதற்கு இதோ மெயிலின் வாதம் சிறந்த உதாரணம்!

இந்த நாட்டிலே ஒரு விஷநீர் ஊற்று இருக்கிறது. அதனைப் பருகிப்பருகி, பரம்பரை பரம்பரையாக மக்கள் பாழாகின்றனர், அந்த ஊற்றுதான் ஆரியம். அதைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலிதான் ஆங்கில அரசு! இதனை எடுத்துரைத்து எச்சரிப்பவரே பெரியார்! விஷபம் வெளியாகி விட்டதால் விபரீதம் நேரிடுமோ என்று வெகுண்டதே மெயில் பத்திரிகையின் பதட்டத்துக்குக் காரணம்.

பார்ப்பனரல்லாதாருக்குப் பாதுகாப்பு இல்லாததால், சட்டசபையிலே 7 ஸ்தானங்களை பெற்றிருக்க வேண்டிய பார்ப்பனர் 49 ஸ்தானங்களைப் பெற்றனர், 10 மந்திரிகளில் நால்வர் அவர்களாயினர், என்று பெரியார்எடுத்துரைத்திருக்கிறார். இதற்கோர் நொண்டிச் சாக்குக் கூறுகிறது இந்த நோய்வாய்! பார்ப்பனர்களிடம் விசேஷ நம்பிக்கைதோன்றி, பார்ப்பனர்களே காரியவாதிகள் என்பதை உணர்ந்து, 49 ஆரியரை பொதுமக்கள் தெரிந்தெடுத்தனராம். நாலுபேர் பார்ப்பனர் மந்திரிகளானதற்குக் காரணமும், அவர்களே வேலைக்குத் தகுந்தவர்கள் என்று பெருவாரியான சட்டசபை மெம்பர்கள், பார்ப்பனரல்லாதார் எண்ணினதேயாம்! வாதத்தின் போக்கைக் கவனியுங்கள்! கடந்த தேர்தல், பார்ப்பனர் ஆள்வதா, ஆளும் தகுதியுடையவர்கள் பார்ப்பனரா, நாமா, என்ற திட்டத்தின்படி நடக்கவில்லை. மனதார பார்ப்பனரின் நோக்கம் எப்படியேனும் ஆரிய அரசை அமைக்கவேண்டும் என்பதே என்ற போதிலும், வெளியே அவர்கள் பேசியது வெள்ளைக்கார ஆட்சியை ஒழிக்கவேண்டும் என்பதுதான். இதனை நம்பியவர்களிடம், "ஆளைப்பற்றி யோசிக்காதே, காங்கிரசைக் கவனி! காங்கிரசின் பேரால்,கூனோ குருடோ, செவிடோ முடமோ, குதிரையோ பிறவோ, எதுநின்றாலும், ஓட்டருக" என்று கூறினர், ஏய்த்தனர். எனவே இந்தத்திரை மறைவிலே 49 பார்ப்பனர் சட்டசபை புகமுடிந்தது. இதனை, மக்கள் அவர்களிடம் நம்பிக்கைவைத்து, வேலைக்குத் தக்கவர்களென்று தீர்மானித்துத் தெரிந்தெடுத்தனர்" என்று மெயில் கூறுவது, அறியாமை என்று நான்கூறினால் நீங்கள் திருப்திப்படமாட்டீர்கள். வேறு கடுமையான பதத்தைத்தேட எனக்கு அவகாசமில்லை, நீங்களே தேடிக்கொள்ளுங்கள். ஆல்கபோன் அமெரிக்காவில் கொள்ளையிட்டான், பொருள்களுக்கு அவனிடம் ஆசை அதிகரித்து, அவனிடம் போய்ச் சேர்ந்தன, என்றுரைக்க, மெயில் முன் வந்தாலும், நாம் எப்படி இனி ஆச்சரியப்பட முடியும்! ரஸ்புடின் ராஜகுடும்பங்களில் ரசாபாசம் செய்தான் என்றால் அவனுடைய ரம்மியத்தில், ராஜகுடும்பங்கள் மோகங் கொண்டன, எனவே ரஸ்புட்டின் மீது தவறில்லை என்று வாதிட மெயில் முன்வரக்கூடும்! ஆல்கபோன் களவில் கைகா

ரன், ரஸ்புடீன் வேடமணிந்து மக்களை மயக்குவதில் சமர்த்தன், ஆனால் அவர்களின் செயலைக் காலம் கண்டிக்கிறது. ஆரியர், தந்திரத்தில் சமர்த்தர்கள். அதனாலேயே, வெள்ளையரைத் தூற்றுவதாக வெளியேபேசிவிட்டு சட்டசபைக்குள்ளே புகுந்து கொண்டனர், இதனால், மக்கள் அவர்களிடம் நம்பிக்கையும் ஆசையுங் கொண்டனர், என்றுரைப்பது மன்னிக்க முடியாத அளவு வளர்ந்துவிட்ட மமதையின் அறிகுறி என்பேன். நான் கேட்கிறேன் மெயிலை, 49 பார்ப்பனர் சட்டசபை புகுந்தது மக்களின் ஆதரவால் ஆகவே குறைகூறலாகாது என்றுரைக்கும் போது, 8 மாகாணங்களிலே, மக்கள் காங்கிரசைத் தெரிந்தெடுத்து அதன்மூலம் ஆங்கில அரசு கூடாது, தன்னரசு வேண்டுமென்ற தமது விருப்பத்தைக் காட்டினார்கள் என்றுரைப்பது தவறாகாதே! மக்களின் விருப்பத்தைத் தெரிந்துகொண்டும், ஏன் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் விட்டுவைத்து அதற்கு வேளைக்கோர் சமாதானங் கூறுகிறீர், வெட்கமில்லையா!

பார்ப்பன ஆதிக்கம் என்றால் உடனே பரங்கி, உத்தியோகத்திலே, நாம் பங்குகேட்கிறோம் என்று குள்ளக்கருத்துடன் கூத்தாடுகின்றனர். பார்ப்பன ஆதிக்கம் என்றுரைக்கும்போது உத்தியோகமண்டலத்திலே அவர்கள் ஆட்சிசெலுத்துவதை மட்டுமல்ல, நாம் குறிப்பது.

ஜாதியிலே உயர்வு, சமயத்திலே தரகு, சமுதாயத்திலே பாடுபடாத வாழ்வு, பொருளாதாரத்திலே சுரண்டல் கொள்கை, மதத்துறையிலே மடமையை வளர்க்கும் கொடுமை, கல்வித்துறையிலே கற்றோரையும் கசடராக்கும் குரூரம், அரசியலிலே ஆங்கிலரை மிரட்டுவதாகக் கூறிக்கொண்டு பேரம்பேசும் போக்கு, வாழ்க்கைத்துறையிலே, இகம், பரம் என்று பிரித்துப் பேசி, உலகம் மாயை என்றுரைத்து வாழ்வு அநித்தியம் என்று வேதாந்தம் போதித்து, மக்களை, எருமை இயல்பு, கொண்டோராக்கும் கோரம், இன்னோரன்ன பிறவற்றையே நாம் குறிப்பிடுகிறோம். உத்தியோக மண்டல விஷயம் இதிலே ஓர் ஒதுக்கிடம், முழுவதும் அதுவல்ல. ஊராள்வோரின் உறவினரான மெயிலுக்கு, உத்தியோக விஷயமட்டுமே கண்ணை உறுத்துகிறது, பிறவற்றைக்காணக் கண்இல்லை.

**ஆரியம் ஓர் நயவஞ்சகநாசீசம், பசப்பும் பாசீசம், ஜாலம் பேசிடும் ஜார், சீலம் என்றுரைத்துத் தமிழ்ச்சீமை ஆண்டவரைச் சிதைத்தசதி, வஞ்சக வல்லரசு, இளித்தவாயரை உற்பத்தி செய்து அவர் மீதேறிச் சவாரிசெய்யும் ஏகாதிபத்தியம், தாசர்கூட்டத்தை உண்டாக்கி, அதற்குத் தரகுத்தொழில் செய்யும் தந்திரயந்திரம்!**

ஒரு அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், என்று அட்டவணையைப்போட்டுப்பாருங்கள், தெரியும் ஆரிய ஆதிக்கம் எவ்வளவு மறுமலர்ச்சியுடன் இருக்கிறதென்பது! இந்த நேரத்திலே :மெயில் கூறுகிறது, உத்தியோக மண்டலத்திலே, ஆரிய ஆதிக்கம் படிப்படியாகக்குறைகிறதாம்!

போதாக்குறைக்கு மற்றோர் வாதத்தையும் நீட்டுகிறது மெயில். உத்தியோகத்துறையிலே நம்மவருக்கு விருப்பம் இல்லையாம், வியாபாரம் தொழில் முதலிய துறைகளில் புகுந்து விடுகிறார்களாம்!

வியாபாரம், என்ற உடனே, வேதனையே வளருகிறது எனது உள்ளத்திலே. எங்கே இருக்கிறது வியாபாரம்! நமது ஆடைகள் பிர்லா மில்லில் தயாராகிறது, நமது இரும்புச் சாமான்கள், டாடா கம்பெனியுடையது, நமது சுதேச மருந்துகள் ராய் கம்பெனியுடையது, தாதாகம்பெனியார் விற்பது, கப்பல் கட்ட ஒரு வால் சந்து ஹீராசந்து, வைர வியாபாரத்துக்கு சுராஜ்மல் லல்லுபாய், தங்கம் வெள்ளிப்பணிகளுக்கு பாபாலால், பண்டங்களுக்கு குப்தாஸ்டோர்ஸ் ஆடைக்குச்செல்லாராம், சிற்றுண்டிக்கு ஆரியபவன், சினிமாவுக்கு ஒரு ராம்லால் நந்தலால், தமிழ்பத்திரிகைக்கு ஒரு கோயங்கா, ஏழைகளை இரட்சிக்கும் வட்டித் தொழிலை வாஞ்சனையுடன் நடத்தவோ, வண்டி வண்டியாக மார்வாடி, குஜராத்திகள், என்று இங்ஙனமிருக்கிறதே வியாபார நிலைமை, தொழில்துறை, இதனை உணர மெயிலுக்கு ஏன் நேரமில்லை என்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ்கட்சித்தலைவர்கள், சொல்லின்படி செயல் அமைந்திருந்தால், நிலைமை மிகநன்றாக இருந்திருக்கும் என்று மெயில் கூறுகிறது. பார்ப்பனரல்லாத வியாபாரிகள், தமது நிலையங்களிலே ஏராளமாகப் பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக்கொள்ளவில்லையா? பார்ப்பனவக்கீல்களை நாடவில்லையா? பார்ப்பனருடைய யோசனையைத் தேடவில்லையா? அவர்கள் பார்ப்பனரல்லாதாருக்கே வேலைகொடுக்க வேண்டும்என்று தீர்மானித்து நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், என்று மெயில் கேட்கிறது.

எனது கருத்தையோ, உங்கள் எண்ணத்தையோ வெளிப்படுத்த, ஒரு பெருமூச்சு விடுவதைத்தவிர வேறென்ன செய்வது. மெயில், யோசனை கூறும் அளவுக்கு, நிலைமை இந்தத்துறையிலே இருக்கிறதென்பதை நான் மறுக்கமாட்டேன். உங்கள் எண்ணமும் அதுதான் என்பது எனக்குத்தெரியும். ஆரியத்தால் நசுக்கப்பட்டு, ஆங்கிலரால் அலட்சியம் செய்யப்பட்டு, திராவிடச் சீமான்களால் கைவிடப்பட்டு, கலங்கித்தவிக்கிறோம். ஆனால் கலக்கத்தைக்கண்டு கேலிசெய்வது, காருண்ய மற்றதுமட்டுமல்ல, மிக்க ஆபத்தானது. வேதனைப்பட்ட உள்ளம் வெடிமருந்துச்சாலைக்குச்சமம்! வெள்ளை எடும்எள்ளி நகையாடும் நிலை, தீக்குச்சியைக் கிழித்துக்காட்டுவதாகும்!

“கார் நிறக்கோதையும் மதிபொருவு வதனமுங் கச்சடங்கா தனமுங் கமல வழியுங்கொண்ட” பேர்வழியாக இருப்பினும், உதட்டில் கனிவும் உள்ளத்தில் கட்டாரியுங் கொண்டிருப்பின், மருவிடச்செல்பவன் மாள்வதில் ஆச்சரியமில்லை. அதுபோல், ஆரியம், சாகசமேனியும், சந்தனவாடையும், தெந்தினப்பாடலுங்கொண்டு, கொஞ்சிட வந்தாலும், அதனை ஓர் நச்சுப்பொய்கை என்றுணர்ந்து, வெறுத்தொதுக்கும் வீரம், திராவிடத்தோழர்களுக்கு உண்டாக்வேண்டும். அந்த வீரம் உதிக்குமானால் திராவிடநாடு உதயமாகும் என்பது திண்ணம். இடைக்காலத்திலே இங்கிதந்தெரியாத ஏடுகள் எது வேண்டுமானாலும், எழுதட்டும், எதற்கும் அஞ்சோம், கண்துஞ்சோம் பகைவெல்வோம், வாகை சூடுவோம்!

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51 Nimanthakara Street, L. Conjeeveram.